REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2024 ஜூன் 1 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 130 | Saturday 01, June, 2024 | 10 பக்கங்கள் | 50/-


மூன்று வருடங்களுக்கு பின்னர்

## 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' சிதைவுகள் கரையொதுங்கியதாக தகவல்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சேதமடைந்த சில பொருட்கள் மூன்று வருடங்களின் பின்னர் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாணந்துறை கடற்கரைக்கு அப்பால்

06

# முதியோருக்கான கொடுப்பனவுகள் ஒருபோதும் நிறுத்தப்பட மாட்டாது

## நலன்புரி நன்மைகள் சபை அறிவிப்பு

### மே மாதத்துக்குரிய ரூபா 1,518 மில். நிதி மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைப்பு

### ஜூன் மாத கொடுப்பனவும் அதே மாதத்திலேயே வழங்கப்படும்

நலன்புரிச் சபையினால் அதிகரிக்கப்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் இதுவரையில் வழங்கப்பட்டு வந்த முதியவர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படுமென வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவையென நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. 2024 மே மாதம் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான சுமார் 1,518 மில்லியன் ரூபா நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப காரணங்களினால் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தாலும், ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தின் பின்னர் பிரதேச செயலகங்களில் வழமையான முறையில் முதியோருக்கான கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் நலன்புரி நன்மைகள் சபை அறிவுறுத்தியுள்ளது.

அதேபோல் ஜூன் மாத கொடுப்பனவும் அதே மாதத்திலேயே வழங்கப்படும் என்றும், அஸ்வெசும கொடுப்பனவு கட்டமைப்பின் கீழ் உரிய வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சபை அறிவித்துள்ளது. இதனிடையே தற்போது அஸ்வெசும நலன்புரித் தொகையை பெற்றுக்கொள்ளும் குடும்பங்களிலிருந்து 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

எதிர்கால சமூக, பொருளாதார இலக்குகளை எட்ட

## AI போன்ற நவீன தொழில்நுட்பங்கள் நாட்டில் ஊக்குவிக்கப்படுவது அவசியம்

### அடுத்த 05 ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் AI தொழில்நுட்பம்



நாட்டில் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களை நாட்டில் ஊக்குவிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் வருடத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும், 05 வருடங்களுக்குள் நாட்டின் சகல துறைகளிலும்

06

சுமார் 60 கோடி ரூபா பெறுமதியான

## ஆறு அதிசொகுசு ஜீப் வண்டிகள் RMV இல் முறைகேடாக பதிவு

### இலங்கை சுங்கத்துக்கு ரூ. 300 மில். இழப்பு

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு

சுமார் 300 மில்லியன் ரூபா வருமானத்தை சுங்கப்பகுதி இழப்பதற்கு காரணமாக இருந்த சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 60 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஆறு சொகுசு ஜீப் வண்டிகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்குமாறு வாகன உரிமையாளர்களுக்கு

06

G.C.E. A/L பெறுபேறு வெளியீடு

## பல்கலை அனுமதிக்கு 173,444 மாணவர் இம்முறை தகைமை

### 190 மாணவர்களின் பெறுபேறு நிறுத்தம்



2023 (2024) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம். சீ.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி 173,444 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளனர்.

06

ஜூன் 03 முதல் 06ஆம் திகதிவரை

## மாலைதீவு வெளிநாட்டமைச்சர் மூசா ஜமீர் இலங்கைக்கு விஜயம்



மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூசா ஜமீர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்நிலையில் எதிர்வரும் ஜூன் 03ஆம் திகதி முதல் 06ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அவரது உத்தியோகபூர்வ விஜயம் அமையுமென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்விஜயத்தின் போது மாலைதீவு வெளிவிவகார

06

திரிபோஷாவுக்கு பதிலாக

## அரிசியில் புதிய போஷாக்கு உணவை தயாரிக்க திட்டம்

### ரூ. 400 மில். செலவாகுமென தெரிவிப்பு

குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோஷாவுக்கு பதிலாக அரிசியிலிருந்து மற்றுமொரு போஷாக்கான உணவை உற்பத்தி செய்வதற்கு தமது நிறுவனம் தயாராகவுள்ளதாக லங்கா திரிபோஷா நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தயாரிக்க அரைக்கும் இயந்திரம் தேவை எனவும் அதற்கு சுமார் 400 மில்லியன் ரூபா செலவாகும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

06

## 2024 வரவு, செலவு திட்ட ஒதுக்கீட்டில் வன்னி மாவட்ட MP வினோவுக்கு நிதி

### ஜனாதிபதி உறுதியளித்ததாக தெரிவிப்பு



2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டை தனக்கும் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்

06

2012 இல் திறைசேரி பத்திர கொள்வனவு


## அஜித் நிவாட் கப்ரால் உட்பட ஐவர் விடுதலை



2012ஆம் ஆண்டு கிரீஸ் அரசாங்கம் வழங்கிய திறைசேரி பத்திரங்களை கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 1.84 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்

06

## இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு 36,000 கருவிழிப்படலங்கள் நன்கொடை



பாகிஸ்தானுக்கு 36,000 கருவிழிப்படலங்களை இலங்கை (Corneas) நன்கொடையாக வழங்கியுள்ளதாக பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார். இலங்கை உலகிற்கு 88,000 கருவிழிப்படலங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. அதில் பாகிஸ்தானுக்கே அதிகளவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

06

## வடமேல் மாகாணத்தில் கால்நடைகள் வளர்ப்பு, இயற்கை எரிவாயு உற்பத்தி

### இந்திய முதலீட்டாளர்கள் ஆர்வம்



மாவத்தகம தினகரன் நிருபர்

வடமேல் மாகாணத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவுவதில் இந்திய முதலீட்டாளர்கள் ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

06

## 06 மாதங்கள் முதல் 03 வயது வரையான குழந்தைகளுக்கு மீண்டும் 'திரிபோஷா'

### உற்பத்திக்கு நிபந்தனைகளுடன் அனுமதி



தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஆறு மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோஷாவின் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியிருப்பதாக பாராளுமன்ற சிறுவர் ஒன்றியத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்தன தெரிவித்தார். இதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதியில் நாட்டில் போசாக்கு தேவைகள் இனங்காணப்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதற்கு

06

'ஹரக் கட்டா'வின் மைத்துனர் 'மிதிகம ருவன்'

## பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் டுபாயிலிருந்து அழைத்து வந்தனர்



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவரும் சர்வதேச போதைப்பொருள் வலையமைப்புடன் தொடர்புபட்ட கடத்தல்காரருமான 'மிதிகம ருவன்' என்றழைக்கப்படும் ஜயசேகர விதானகே ருவன் சாமர கைது செய்யப்பட்டு

06



03

### இலங்கை மாணவர்களுக்கு சுய நிதியிடல் திட்டத்தின் கீழ் கற்கைகள்




03

### உரிய வழித்தட அனுமதி இல்லாமல் சுண்ணாம்புக்கல் ஏற்றிச்செல்ல தடை

## நாட்டில் முட்டைகளின் பாவனை தினசரி 80 இலட்சமாக அதிகரிப்பு

### குறைந்த விலையிலுள்ள சத்தான உணவு என்பதால் மக்கள் ஆர்வம்



நாட்டில் நாளாந்த முட்டை நுகர்வு அதிகரித்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கோழி முட்டைகளின் தினசரி நுகர்வு சுமார் பத்து இலட்சத்தினால் அதிகரித்துள்ளதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் நாளாந்தம் கோழி முட்டை

06

## தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்த மனு மீதான பரிசீலனை திங்கள்வரை ஒத்திவைப்பு



தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை நிர்ணயித்து தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் திங்கட்கிழமைவரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (31) தீர்மானித்துள்ளது.

நீதியரசர்கள் சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் (30) கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா விடயங்களை முன்வைத்தார். இதனையடுத்து

06

## பூஸா சிறைச்சாலையில் STF அதிரடி சோதனை

### கையடக்க தொலைபேசிகள் மீட்பு



பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த சோதனை நடவடிக்கையின் போது மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கையடக்க தொலைபேசிகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால்

06

# நகர்வலம்



# பாகிஸ்தான் பிரதமருடன் இலங்கை பௌத்தமத தூதுக்குழுவினர் சந்திப்பு

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'காந்தாரத்திலிருந்து உலகிற்கு' என்ற தொனிப்பொருளில் நடைபெறும் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து பௌத்தமத தூதுக்குழுவினர் பாகிஸ்தான் சென்றுள்ளனர்.

இதன்போது பாகிஸ்தான் பிரதமர் முஹம்மது ஷெஹ்பாஸ் ஷெரீப்பை இஸ்லாமாபாத்தில் பௌத்தமத தூதுக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த தூதுக்குழுவில் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வியட்னாமைச் சேர்ந்த திச் டக் துவான் தேரர், தாய்லாந்தை சேர்ந்த அனில் சக்யா தேரர், நேபாளத்தை சேர்ந்த கலாநிதி கேஷப்மான் ஷக்யா ஆகியோர் அடங்குகின்றனர்.

தூதுக்குழுவினரை பாகிஸ்தான் பிரதமர் அன்புடன் வரவேற்றார். இதன்போது புத்தரின் பிறப்பு,



அறிவொளி மற்றும் மரணத்தை நினைவுகூரும் 'வெசாக் தினம்' சார்ந்து நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அவர்கள் பங்கேற்றமைக்கு தனது நன்றியை பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்தார்.

மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்துக்கு தனது அரசாங்கம் அளிக்கும் முக்கியத்துவத்தை தூதுக் குழுவினருக்கு அவர் சுட்டிக்காட்டியதோடு, மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் மற்றும் புரிதலை மேம்படுத்துவதற்கு பௌத்த அறிஞர்கள் மற்றும் தேரர்களின் பங்களிப்புகளையும் அவர் புகழ்ந்து பேசினார்.

இதேவேளை அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய கலாசாரத்தை வளர்ப்பதில் பிரதமரின் உறுதிப்பாட்டை பௌத்த தலைவர்கள் பாராட்டியதோடு, பௌத்த பாரம்பரிய தளங்கள் மற்றும் கலாசார கலைப்பொருட்களை பாதுகாத்து வைத்திருக்கும் பாகிஸ்தானின் முயற்சிகளையும் அவர்கள் பாராட்டினர்.

பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்புக்கான வழிகளை தொடர்ந்து ஆராய்வது மற்றும் அமைதியான உலகத்தை நோக்கி ஒன்றிணைந்து செயல்படுவது என்ற தீர்மானத்துடன் இந்த சந்திப்பு முடிவடைந்தது. மேலும் அது தொடர்பாக, உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான கூட்டு மன்றம் ஒன்றினை நிறுவுவதற்கான சாத்தியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பாகிஸ்தான் சமய விவகார அமைச்சர் சாலிக் ஹுசேன், தகவல், ஒளிபரப்பு மற்றும் கலாசார பாரம்பரிய அமைச்சர் அதாஉல்லா தாரார், பிரதமரின் சிறப்பு உதவியாளர் சையத் தாரிக் ஃபதேமி ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர்.

# முடி உலர்த்தியவர் மின்சாரம் தாக்கி பலி

**புத்தளம் தினகரன் நிருபர்**

தனது வீட்டில் குளித்துவிட்டு தலை முடி உலர்த்தி மூலம் முடியை உலர வைத்துக் கொண்டிருந்த மாணவர் ஒருவர் மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த சம்பவம் புத்தளத்தில் கடந்த புதன் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மின்சார தாக்குதலுக்கு உள்ளாகிய இம்மாணவர், புத்தளம் தள வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்று வந்த சலீம் மொஹமட் சஹ்ரான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 2023ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பரீட்சையை கடந்த மாதம் இம்மாணவர் எழுதியிருந்தார்.

புத்தளம் ஐந்தாம் குறுக்குத் தெருவில் இம்மாணவர் வசித்து வருகிறார்.

இவரது மரண விசாரணையை மேற்கொண்ட புத்தளம் மற்றும் கல்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம், மின்சாரம் தாக்குதலினால் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளித்ததுடன், குடும்பத்தினரிடம் ஜனாஸா ஒப்படைக்கப்பட்டது.

இவரது ஜனாஸா புதன்கிழமை இரவு புத்தளம் பக்கா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைது

மட்டக்குளி, காக்கைத்தீவு கடற்கரை பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 403 கிராம் 230 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சந்தேக நபரிடம் மட்டக்குளி பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நூலக ஊழியர்களுக்கு செயலமர்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**



இலங்கை நூலக சங்கமும் புத்தளம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகமும் இணைந்து நடத்திய புத்தளம் மாவட்ட நூலக ஊழியர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை புத்தளம் புத்தளம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எச்.எம். டபில்யூ.பீ.ஹேரத் தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

இந்த செயலமர்வில் இலங்கை நூலக சங்க விரிவுரையாளரும் களனி பல்கலைக் கழக சிரேஷ்ட உதவி நூலகரும் நூலக சங்க பொது நூலக குழுவின் போஷகருமான விஜித் ஜயசிங்ஹ மற்றும் புத்தளம் பொது நூலகத்தின் பிரதம நூலகர் கே.எம்.நிஷாத் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

# மணி குருக்களின் மாபெரும் இன்னிசை விருந்து, பாராட்டு விழா

திரையிசைத் திலகம் மணிப்பாடகர் டாக்டர் சாம்பசிவ T.M.S. மணி குருக்கள் வருடாந்தம் நடத்தும் மாபெரும் இன்னிசை விருந்தும், பாராட்டு விழாவும் எதிர்வரும் 2024.06.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை கொழும்பு 13, மேட்டுத்தெருவிலுள்ள கமலாமோடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் 50 கலைஞர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்கள். 15 மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

மறைந்தும் மறையாது மக்களின் மனங்களில் வாழும் திரையிசைப் பாடகர்களான இசைமேதை கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டா் டீ. எம். செந்தராஜன், இசை சக்கரவர்த்தி கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜன், முதல் பின்னணிப் பாடகர் கலைமாமணி திருச்சி லோகநாதன், அதிர்வேட்டு குரலோன் கலைமாமணி டீ.ஆர். மகாலிங்கம் ஆகியோரை நினைவு கூரும் முகமாக இந்த இன்னிசை நிகழ்வில், இவர்கள் பாடிய பாடல்கள் பல பாடப்படும். இந்த விழாவில், ஆசியுரையை க.செந்தில்நாதக்குருக்கள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ. வைத்ய வைகுந்தசிவாச்சார்யார் சிவஸ்ரீ வை.கமலநாதக் குருக்கள், சிவஸ்ரீ சிவ. நேசக்குருக்கள் தலைமை ஆறுமுகம் ரவீந்திரன் (குருசாமிகள் ஒன்றியம்) முன்னிலை ரி.வி.டி. கதிரேசன் (பெரி) ஆகியோர் ஆன்மிக விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள். வாழ்த்துரை சு.ரவீந்திரகுமார் (குருசாமி ஒன்றியம்) வரவேற்பு டாக்டர் சாம்பவசிவமணிக்குருக்கள் பிரதமர் விருந்தினர்களாக ஸ்ரீவாசம் லோகநாதன் (JP), அருணாசலம் சந்திரசேகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், மக்கள் வங்கியின் முகாமையாளர் வேல்ராணி காத்திகேசு, கலைஞர் விஜயராஜ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள். ராஜேந்திரன் (குருசாமி), க. ராமதாஸ் (குருசாமி), நந்தாமாஸ்டர் நடிகர் (குருசாமி), ஹரன், நல்லதம்பி, மகேஷ்வரன் (ரவி ஜூவல்லரி), கனகசபை சாமி, டிஸ்கோ ராஜா, கே.செல்வராஜன், ராஜசேகரன், ஹெலன்குமாரி ஆகியோர் அன்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நிகழ்ச்சியின் உறுதுணையாளரான தமிழ் பேராசிரியர் பிரம்மஸ்ரீ சசாங்கன் சர்மா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கவுள்ளார்.

சித்தாரா இசையில் நடைபெறும் இன்னிசை நிகழ்வில் பிரபல தென்னிந்திய கலைஞரும் பாடகருமான கலைமோகன், சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சிதம்பரம் தியாகராஜன் ஆகியோருடன் இவ்விழா அமைப்பாளர் பெரும் பாடகர் திரையிசைத் திலகம் மணிப்பாடகர் டாக்டர் சாம்பசிவ மணி குருக்களும் பாடல்களைப் பாடி பரவசப்படுத்தவுள்ளார்.

# கொழும்பு மாநகர சபையின் வெசாக் வலயம்

கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த வெசாக் பண்டிகை வலயம் கடந்த 23ஆம் 24ஆம் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நடைபெற்றது.

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் ஜே.எம். பத்ராணி ஜயவர்தனவின் ஆலோசனையின்படி இந்த வெசாக் வலயம் நடத்தப்பட்டது.

வெசாக் அலங்காரங்களை கண்டு களிப்பதற்கு வருகை தந்த பக்தர்களுக்கு ஐஸ்கிரீம் தானமாக வழங்கப்பட்டது.

வெசாக் வலயத்தில் கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்களால் உருவாக்கப்பட்ட வெசாக் கூடுகள், பக்திப் பாடல்கள், பொம்மலாட்டம், பொது நூலக வளாகத்தில் நடைபெற்ற சித்திரக் கண்காட்சிகள், பௌத்த திரைப்படங்கள் போன்ற பல அம்சங்களையும் காணும் வாய்ப்பு வருகை தந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.



(படம்: கொழும்பு குறூப் நிருபர்)

# 617Kg பீடி இலைகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது



கற்பிட்டி, உச்சமுனை கடற்கரை பிரதேசத்தில் ஒருதொகை பீடி இலைகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கடற்படையினரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கடற்கரை பிரதேசத்தில் கடற்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போதே, நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பீடி இலைகளுடன் இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 617 கிலோ 800 கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட டிங்கிப் படகொன்றை கண்காணித்து, அதில் சோதனை நடத்திய போது, 19 மூடைகளில் அடைக்கப்பட்ட பீடி இலைகள் காணப்பட்டதாகவும் இந்நிலையில் டிங்கிப் படகுடன் அப்பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கடற்படையினர் கூறினர்.

கற்பிட்டியைச் சேர்ந்த 21, 46 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கிப் படகுடன் சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைக்காக வடமேல் மாகாண கலால் திணைக்கள பிரிவினரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் விருது விழா

தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் நடத்தப்படும் வருடாந்த தந்தை செல்வா ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 02ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு 14 கலைமகள் தமிழ் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் எஸ்.ரவிந்திரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் சபா ஜெயராஜா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கதிர்வேலாயுத சுவாமி அறங்காவலர் கே.ரகுநாதன், கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் கலாநிதி செல்வநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக விவேகனந்தா தேசிய பாடசாலை அதிபர் மூக்கையாப்பிள்ளை மூவேந்தன், விவேகானந்தா தேசிய பாடசாலையின் முன்னாள் உப அதிபர் பி.ஸ்டேன்லி ரஞ்சிதன், காக்கை தீவு இந்துமன்ற தலைவர் தியாகராஜா தயாநிதி, மகேந்திரன் சியாந்தி (சமுர்த்தி வங்கி முகாமையாளர் மட்டக்களப்பு), எம்.ஸ்ரீகுமார் (சமூக சேவையாளர் பதுளை), பெ. தம்பிராஜா (முன்னாள் அதிபர் பலாங்கொடை), எஸ்.கோபாலன் (ஆசிரிய ஆலோசகர் நுவரெலியா) ரா.பாலசந்திரன் (அதிபர் புஸல்லாவ), அருள்நாதன் (லங்காஸ்ரீ ஊடகம் கொழும்பு) திருமதி பிரணிதா தமீந்திரன் (சக்தி எப்.எம்.) வ.ஜகதாஸ் (அதிபர் திருகோணமலை), சுதத் ஹேமந்த பண்டார (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்) ஆகியோர் தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும். பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பதக்கம் வழங்கப்படும். அறநெறிப் பாடசாலைக்கு தவறாது வருகை தந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். இதேபோல் 2023 முதல் 2024 மே மாதம்வரை தவறாது வருகை தந்த ஆசிரியருக்கு 25,000 ரூபா பணப்பரிசு வழங்கப்படும். இதற்கான ஒழுங்குகளை பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம், பிரதி தலைவர் நா.சத்தியமூர்த்தி, மன்ற பொருளாளர் தர்சினி, நிர்வாக செயலாளர் ஆ.புவனேஸ்வரி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# சீனன்கோட்டை பெரிய பள்ளிவாசலில் மனாகிப் மஜ்லிஸ்

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் 133ஆவது வருட மனாகிப் தமாம் கந்தூரி மஜ்லிஸ் அண்மையில் கலீபதுல் குலபா மௌலவி அல் உஸ்தாத் எம்.இஸட். முஹம்மத் ஸுஹுர் (பாரி) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சீனன்கோட்டை பகுதிக்கான சாதுலிய்யாத் தரீக்காவின் புதிய கலீபாவாக அத்தரிக்காவின் உலக ஆன்மிகத் தலைவர் செய்கு ஸஜ்ஜாதா அஷ் செய்ஹ் மஹ்தி அப்துல்லாஹ் அல்பாஸி அல் மக்கி அஷ் மக்கி அஷ்ஷாதுலி அவர்களினால் நியமிக்கப்பட்ட அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளருமான அஷ் செய்ஹ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) க்கான நியமனக் கடிதமும் இதன்போது கையளிக்கப்பட்டது.

பள்ளிச் சங்கமும் ஜாமியத்துல் பாஸியதுஷ்ஷாதுலியா கலாபீடமும் இணைந்து அன்னாருக்கு இணை நினைவுச் சின்னமொன்றையும் வழங்கியது.

கலீபதுல் குலபா, பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம்.முக்தார் ஹாஜியார், இணைச் செயலாளர் எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார், ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலியா கலாபீட நிர்வாக சபை தலைவர் சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.ஸி.எம்.ஹம்ஸா ஆகியோரினால் நினைவுச்சின்னம் கையளிக்கப்பட்டது.



# தங்கச் சங்கிலிகளை திருடிய 31 வயது நபர் கைது



தங்கச் சங்கிலிகள் பலவற்றை திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் ஜாஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தடுகம பாலத்துக்கு அருகில் கடந்த புதன்கிழமை அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிம்புலாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது ஜாஎல, பமுணுகம, சீதுவை, கட்டான மற்றும் கட்டுநாயக்கா ஆகிய இடங்களில் 07 தங்கச் சங்கிலிகளை இச்சந்தேக திருடியுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றில் 06 தங்கச் சங்கிலிகள் மற்றும் தங்கச் சங்கிலிகளின் துண்டுகள் சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சந்தேக நபரிடம் தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூன் 1 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.32
லுஹர் - 12.10
அஸர் - 03.36
மஃரிப் - 06.24
இஷா - 07.40

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 19
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# கொலன்னாவை புதிய நகர திட்ட வரைவு தயாரிப்பு நிறைவு

## எரிபொருள் விநியோகத்துக்கு பயன்படுத்தப்பட்ட ரயில் பாதை பத்தரமுல்லை வரை நீடிக்கப்படும்

கொலன்னாவை நகர சபை பிரதேசத்தை புதிய நகரமாக மாற்றுவதற்கான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொலன்னாவை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே (28) பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய பிரதமர், கொலன்னாவை நகர சபை பிரதேசத்தை புதிய நகரமாக்குவதற்கும், புதிய நகரத்தின் வசதிகளை மக்களுக்கு வழங்குவதற்கும், புதிய கவர்ச்சியுடன் கூடிய பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கும் அடிப்படை வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



கொலன்னாவை நகர சபை எல்லைக்குள் ஏற்படும் மாற்றத்தின் ஊடாக புறநகர் பகுதிகளும் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கு உள்ளாகும். கொலன்னாவை சுத்திகரிப்பு நிலையத்துக்கு எரிபொருள் கொண்டு செல்லும் ரயில் பாதை பத்தரமுல்லை நகரத்துடன் இணைக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்து பாதையாக மாற்றப்படும்.

இதன் மூலம் பல முக்கிய நிர்வாக நிறுவனங்கள் அமைந்துள்ள பத்தரமுல்லையை விரைவாக சென்றடையும் திறனை பெறுவதோடு, கொழும்பில் போக்குவரத்து நெரிசலுக்கு இதன் மூலம் தீர்வு காணப்படும்.

கொலன்னாவை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரியநாத் பெரேரா, மக்கள் ஐக்கிய முன்னணியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வி.பிரபாஷினி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



கித்துல்கல பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சத்திர சிகிச்சை, அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு முதலானவற்றை கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பான நிகழ்வு சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரண மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க ஆகியோரின் தலைமையில் நேற்று (31) நடைபெற்றது. சுகாதாரத்துறையில் பௌதீக வளங்களை அதிகரித்து சிறப்பான சுகாதார சேவையை வழங்கும் நோக்கத்துடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் 250 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

# உரிய வழித்தட அனுமதி இல்லாமல் சுண்ணாம்புக்கல் ஏற்றிச்செல்ல தடை

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

உரிய வழித்தட அனுமதியின்றி யாழ். மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு சுண்ணாம்புக்கல் கொண்டு செல்ல முடியாதென யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


யாழ். மாவட்டத்தில் அகழப்படும் சுண்ணாம்புக் கற்களை எவ்வித அனுமதியும் இன்றி வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைய, அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட துறைசார் அதிகாரிகள் பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

அனுமதிப்பத்திரமின்றி சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் அகழப்படுவதோடு, வெளி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. சட்ட விதிமுறைகளுக்கு அமைய சுண்ணாம்புக்கல் அகழ வேண்டும் எனவும், அதனை உள்ளூர் தேவைக்கே பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

06



தினகரன்
92
வருடங்களுக்கு முன்
தினகரன்
இன்று 01 ஜூன் 1932


சிக்கனக் கமிட்டி
யாழ்ப்பாணத்தில் விசாரணை
மணியகாரர்
வவுனியாவில் கச்சேரி
சென்ற திங்கட்கிழமை சிக்கனக் கமிட்டி யாழ்ப்பாணக் கச்சேரியில் விசாரணையை ஆரம்பித்தது. விசாரணை செய்யப்பட்டவர்களில் திரு. டீ. எம். சபாரத்தினத்தை (மாஜி சட்டசபை அங்கத்தவர்) விட ஏனையோர் யாவரும் உத்தியோகஸ்தராயிருந்தார்கள்.

### சிக்கனக் கமிட்டி

யாழ்ப்பாணத்தில் விசாரணை

### மணியகாரர்

வவுனியாவில் கச்சேரி

சென்ற திங்கட்கிழமை சிக்கனக் கமிட்டி யாழ்ப்பாணக் கச்சேரியில் விசாரணையை ஆரம்பித்தது. விசாரணை செய்யப்பட்டவர்களில் திரு. டீ. எம். சபாரத்தினத்தை (மாஜி சட்டசபை அங்கத்தவர்) விட ஏனையோர் யாவரும் உத்தியோகஸ்தராயிருந்தார்கள்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)




காஸாவில் உடனடி யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் முன்பாக சுதந்திர பலஸ்தீன இயக்கம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்ததோடு மகஜரொன்றையும் நேற்று கையளித்தது.

இந்திய கப்பலில் எரிபொருள் கசிவு

# சட்ட நடவடிக்கையூடாக நட்டஈடு பெற தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

திருத்த வேலைகளுக்காக கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலில் எரிபொருள் கசிவு ஏற்பட்டதற்கு நட்டஈடு கோரப்படவுள்ளது. இக்கப்பலை பொறுப்பேற்றுள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இக்கப்பலுக்கு சொந்தமான நிறுவனம் மற்றும் காப்புறுதி நிறுவனத்துக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்த மேற்படி அதிகார சபையின் பேச்சாளர்,

"கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் கீழ் கப்பல் நிறுவனத்திடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொள்ளப்படும். இக்கப்பல் இந்திய நிறுவனத்துக்கு சொந்தமானது. கப்பலிலிருந்து ஹைட்ராலிக் எண்ணெய் கசிந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கப்பலுக்கு சொந்தமான நிறுவனமும் தவறை ஏற்றுக்கொண்டு இழப்பீடு வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை சம்பந்தப்பட்ட இந்திய கப்பலின் கெப்டன், நாட்டை விட்டு வெளியேறுவதை தடுக்கும் வகையில் பயணத்தடை விதிக்கவும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.




காஸா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறும் நிரந்தர போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் பலஸ்தீன ஒத்துழைப்புக்கான இலங்கைச் சங்கமும் சோசலிச மற்றும் இளைஞர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம், கொழும்பு தெவட்டகஹ ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்று பிற்பகல் இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

# இலங்கை தமிழ் பள்ளி மாணவர்களுக்கு 'கலங்கரை' தொழில் வழிகாட்டல் பயிற்சி



திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் இலங்கைத் தமிழ் பள்ளி மாணவர்களுக்கான 'கலங்கரை' தொழில் வழிகாட்டுதல் பயிற்சியை நடத்தியது.

இது தொடர்பாக தமிழக அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

"தமிழ்நாடு முழுவதும் 29 மாவட்டங்களில் உள்ள 103 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் சுமார் 57,772 இலங்கைத் தமிழர்கள் வசிக்கின்றனர். அவர்களில் 2023 - 24ஆம் கல்வியாண்டில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் சித்தியடைந்த 2,256 மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் பயிற்சி 29 மாவட்டங்களில் உள்ள அரசு மாதிரி பள்ளிகளில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இத்திட்டத்தை அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை மற்றும் தமிழ் நாடு மாதிரி பள்ளிகள் துறையும் ஒருங்கிணைந்து நடத்தின.

சென்னை நுங்கம்பாக்கத்தில் பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் (DPI CAMPUS) நடைபெற்ற இந்நிகழ்வில் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை அரசு செயலாளர் க.நந்தகுமார், இந்நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தையும் இதனால் ஏற்படவுள்ள நன்மைகளையும் எடுத்துரைத்தார்.

அதில் "கல்வி பயில்வதன் மூலம் மட்டுமே நமது வாழ்க்கைதரத்தை மேம்படுத்த முடியும். எனவே தாயகம் திரும்பிய முகாம் மாணவர்கள் நன்கு படித்து நல்ல பணியில் அமர்ந்து தங்களது வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற வேண்டும். முகாம்வாழ் மாணவர்கள் அனைவருக்கும் உயர் கல்வி பயில்வதற்கு தேவையான செலவுகள் அனைத்தையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தி நன்கு படிக்க வேண்டும்" என்றார்.

தனி நபர்களின் திறன்கள் மற்றும் திறமைகளை கண்டறிந்து, இந்தத் திறன்களை அவர்கள் சிறப்பாக பயன்படுத்தக்கூடிய தொழில்களை நோக்கி அவர்களை வழிநடத்துவதில் கல்வியின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு அவர் எடுத்துரைத்தார்.

இலங்கை மாணவர்களுக்கு

# சுய நிதியிடல் திட்டத்தின் கீழ் கற்கைகள்

## இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

2024 - 25ஆம் கல்வியாண்டில் சுய நிதியிடல் திட்டத்தின்கீழ் MBBS, BDS, BE, B.Tech, B.Pharm, B.Arch ஆகியவற்றில் பட்டப்படிப்புகள், டிப்ளோமா மட்ட தொழில்நுட்பக் கற்கைநெறிகள் மற்றும் மருந்தியல் டிப்ளோமா ஆகியவற்றுக்கு தகுதியான இலங்கை மாணவர்களிடமிருந்து (PIO/OCI அட்டைகள் வைத்திருப்போர் மற்றும் NRI தவிர்ந்தோர்) கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.




MBBS/BDS கற்கைநெறிகளுக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 'நீட்' (NEET) பரீட்சையில் ஆகக் குறைந்தது 50 சதவீத புள்ளிகளையும் உயர்தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தலா 50 வீதமான புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

அதேவேளை BE/B.Tech மற்றும் பொறியியல் டிப்ளோமா கற்கை நெறிகளை தொடர விரும்புவோர் உயர்தரத்தில் கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் தலா 60 வீதமான புள்ளிகளையும் ஆங்கிலத்தில் 50 வீதமான புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டுமென்பது அவசியமானதாகும்.

அதேபோல B.Pharmacy மற்றும் மருந்தியல் டிப்ளோமா கற்க விரும்புவோர் உயர்தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களில் தலா 60 வீதமான புள்ளிகளையும் ஆங்கிலத்தில் 50 வீதமான புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும்.


B.Arch கற்கையினை தொடர விரும்புவோர், புதுடில்லி, கட்டடக் கலை சபையினால் குறித்துரைக்கப்பட்ட தகுதிகாண் உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவை உள்ளது. ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள், வேலை நாட்களில் 14.00 மணி முதல் 16.00 மணி வரையான நேரத்தில் கொழும்பு 03 இல் அமைந்துள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவில் இலங்கை கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தரச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் பிறப்புச் சான்றிதழையும் காண்பித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தேவையான அனைத்து ஆவணங்களுடன் உயர்ஸ்தானிகராலயத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2024 ஜூன் 18ஆம் திகதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்த சிகரெட்டுகளுடன்

# உதவி சுங்க அத்தியட்சகர் ஒருவர் கைது

சட்டவிரோதமாக நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் 7,000 உடன் உதவி சுங்க அத்தியட்சகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கொழும்பு, கோட்டை பகுதியில் வைத்து கொழும்பு மத்திய ஊழல் குற்றத் தடுப்புப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் 5,90,000 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 23

### குறள் தரும் சிந்தனை



நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வார் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்

உள்ளத்தில் அன்பு இல்லாமல் தன்னலத்துக்காக உடலுறவு கொள்ளும் பொதுமகளிர் தோளை, உறுதியற்ற மனம் படைத்தோர் மட்டும் நம்பிக் கிடப்பர்.

## இந்தியாவில் சுமுகமானதொரு ஆட்சி அமைவது அவசியம்!

இந்திய மக்களவைத் தேர்தலின் இறுதிக் கட்ட வாக்களிப்பு இன்று நடைபெறுகின்றது. இன்றுடன் இந்திய லோக்சபா தேர்தல் முடிவடைகின்றது. இத்தேர்தலின் இறுதி முடிவுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளன.

இந்தியா உலக பொருளாதாரத்தில் மிகவும் வளர்ச்சி பெற்ற நாடாகும். அத்துடன் இராணுவ வல்லரசாகவும் உள்ளது. விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவத்துறைகளிலும் இந்தியா மிகவும் வளர்ச்சி பெற்று விளங்குகின்றது. உலக நாடுகளுடன் போட்டிபோடும் வண்ணம் இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

எனவேதான் இந்தியத் தேர்தலின் இறுதி முடிவை உலக நாடுகள் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் எதிர்கால வளர்ச்சியைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல் என்றும் இத்தேர்தலைக் கூறலாம். இந்தியா தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையில் செல்லப் போகின்றதா? இல்லையேல் வீழ்ச்சிப் பாதைக்குச் செல்லுமா என்பதெல்லாம் வரப்போகின்ற புதிய அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது.

இந்தியாவில் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் தொடங்கியது. எல்லாமாக ஏழு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகின்றது. இன்றுடன் தேர்தல் முடிவடைகின்றது. இந்தியா மிகப்பெரும் தேசம் என்பதால், ஒரே நாளில் லோக்சபா தேர்தலை நடத்தி முடிப்பதென்பது சாத்தியமற்ற விடயமாகும். எனவேதான் இந்தியாவில் பொதுத் தேர்தல் கட்டம் கட்டமாக நடைபெறுகின்றது.

லோக்சபா தேர்தலில் எந்த அணி வெற்றி பெறுமென்பதை அறுதியிட்டுக் கூற முடியாதிருக்கின்றது. தேர்தல் ஆரம்பித்த வேளையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியின் செல்வாக்கு அமோகமாக இருந்தது. நரேந்திர மோடி மூன்றாவது தடவையாகவும் பிரதமராக ஆட்சிபீடமேறுவார் என்று தேர்தல் அவதானிகள் உறுதியாகக் கூறியிருந்தனர். பல்வேறு கருத்துக் கணிப்புகளும் பா.ஜ.க வெற்றி பெறுமென்றே எதிர்வு கூறின.

ஆனால், தேர்தல் ஆரம்பமான பிறகு அரசியல் நிலைமை வேகமாக மாற்றமடைந்தது. பா.ஜ.கவின் செல்வாக்கு மிக வேகமாக சரிவுக்குள்ளானது. அதேவேளை 'இந்தியா' என்ற எதிரணிக் கூட்டணியின் செல்வாக்கு வளர்ந்து கொண்டு வந்தது. தேர்தல் முடிவுறும் இன்றைய நிலைமையில் பா.ஜ.க அணியா அல்லது காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியா வெற்றி பெறுமென்பதை ஊகிக்க முடியாத நிலைமையில் தேர்தல் களம் உள்ளது.

பா.ஜக.விற்கு ஏற்பட்ட சிக்கல் ஆர். எஸ்.எஸ் அமைப்பின் ஆதரவு இம்முறை இல்லாமல் போனதாகும். இதனால் பா.ஜ.கவிற்கு ஆதரவான வாக்கு சதவீதம் வெகுவாக சரிந்துவிட்டது என்று தேர்தல் அவதானிகள் கூறுகின்றனர்.

உலக வரலாற்றில் இதுவரை இல்லாத மிகப்பெரிய தேர்தல் இதுவென்று சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். முன்னைய தேர்தலுக்கு மேலதிகமாக 44 நாட்கள் இத்தேர்தல் நீடித்துள்ளது. 1951_52 இந்தியப் பொதுத்தேர்தலுக்குப் பிறகு இரண்டாவது முறையாக இவ்வளவு அதிக நாட்கள் ஒரு தேர்தல் நடைபெறுகிறது.

கடந்த முறை தேர்தலில் பா.ஜ.க முழுமையான நம்பிக்கையுடன் இருந்தது.ஆனால் இம்முறை பா.ஜ.க அவ்வாறு இல்லை. அவர்களிடம் தோல்விக் கலக்கம் தென்படுகின்றது. ஆனாலும் பா.ஜ.க இறுதிநேரத்தில் ஆட்சியமைக்கும் வாய்ப்புகளும் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பா.ஜ.கவினர் தேர்தல் முடிவை நினைத்து பதற்றமாக இருக்கிறார்கள். வெற்றிபெறப் போகிறோம் என்று அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. அவர்களிடம் பதற்றம் உள்ளது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தியத் தேர்தல் என்பதை இலங்கை மக்களாகிய நாம் புறக்கணித்து அலட்சியமாக இருந்துவிட முடியாது. இந்தியாவானது இலங்கையின் நெருங்கிய நட்புநாடு. அயல்நாடும் ஆகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது இந்தியாவுடன் தொடர்புபட்டதாகும். இந்தியாவும் இலங்கையும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் மிகவும் நெருங்கிய தொடர்புடைய நாடுகளாகும்.

அதுமாத்திரமன்றி, வரலாற்று ரீதியில் பண்டைக் கால நட்புறவைப் பேணிவரும் நாடுகளாகவும் இந்தியாவும் இலங்கையும் விளங்குகின்றன. இலங்கையில் நெருக்கடி ஏற்பட்ட வேளைகளில் ஓடோடி வந்து உதவி வழங்கிய நாடாக இந்தியா உள்ளது. இலங்கையின் பாதுகாப்பு, மருத்துவம், கல்வி, கட்டுமான அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்களில் கடந்த காலத்தில் இந்தியா வழங்கிய உதவிகள் கொஞ்சநஞ்சமல்ல.

இந்தியாவில் அரசநிர்வாகம் சுமுகமாக இயங்கினாலேயே இருநாடுகளுக்குமிடையில் நட்புறவு நெருக்கமடையும் என்பது உறுதி. இன்று இறுதிக் கட்ட வாக்களிப்பு நடைபெற்று, எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்தல் முடிவு வெளியாகப் போகின்றது. இந்தியாவில் ஸ்திரமான அரசாங்கமொன்று அமைந்து, இருநாடுகளுக்குமிடையே நட்புறவு மேலும் பலப்பட வேண்டியதே சிறந்ததாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் என்ன நிகழும்?

**பிரதமராக வருபவரை பொறுத்து நாட்டின் மார்க்கெட், விலைவாசி உட்பட சட்ட ஒழுங்கு வரை பலவும் ஜூன் 4ஆம் திகதிக்கு பின் மாறும் வாய்ப்புகள் உள்ளன.**

இந்தியாவில் ஒருவேளை ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், ஜூன் 4க்கு பின் என்னவெல்லாம் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. 2024 லோக்சபா தேர்தல் பரபரப்பை நெருங்கும் நிலையில், அரசியல் ஆராய்ச்சியாளர் யோகேந்திர யாதவ், தற்போதைய அரசியல் நிலவரப்படி பாஜக 250க்கும் குறைவான இடங்களையே பெறும். பாஜக பெரும்பான்மை பெற வாய்ப்பு இல்லை என்றுள்ளார்.

முக்கியமாக தேர்தல் இறுதிக்கட்டத்தின் போது உ.பி. மற்றும் பீகாரில் இருந்து பாஜக எதிர்ப்பு வாக்குகள் அதிகம் ஆகும் பட்சத்தில் பாஜகவிற்கு மட்டுமல்ல என்.டி.ஏவுக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம். என்.டி.ஏவை விட இந்திய கூட்டணி அதிக இடங்களைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கும்.

இந்தியா கூட்டணி 250 இடங்களை தாண்டி பெற வாய்ப்புகள் உள்ளன. பாஜக தனித்து பெரும்பான்மை பெறுவதற்கான வாய்ப்புகள் தற்போது குறைவாகவே உள்ளன. சிலர் கணிப்புகள் பொய்களை சொல்கின்றன என்று அரசியல் ஆராய்ச்சியாளர் யோகேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

யோகேந்திர யாதவ் மட்டுமின்றி இன்னும் பலர் இதே போன்ற கணிப்புகளை தெரிவித்து வருகின்றனர். அதாவது பாஜகவிற்கு தனி பெரும்பான்மை கிடைக்காது. என்.டி.ஏவிற்கும் தனி பெரும்பான்மை கிடைக்காது. கண்டிப்பாக பாஜகவிற்கு இது சிக்கலை ஏற்படுத்தும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன.

2024ல் ஒருவேளை ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், அதாவது பாஜக, என்.டி.ஏ கூட்டணி இல்லாத ஆட்சி, எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி ஏற்பட்டால், ஜூன் 4க்கு பின் என்னவெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

எதிர்க்கட்சி கூட்டணியில் பல அமைச்சர்கள், மாஜி அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் சிறையில் உள்ளனர். சிறையில் உள்ள செந்தில் பாலாஜி உட்பட பலர் விடுதலை ஆக வாய்ப்புகள் உள்ளன. ஆட்சி மாறினால் அமுலாக்கத்துறை காட்சியும் மாறும். அமலாக்கத்துறை, வருமான வரித்துறை நடத்தும் பல வழக்குகள் கைவிடப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆளும் தரப்பு மீது அமுலாக்கத்துறை, வருமான வரித்துறை வழக்குகள் பாயும் வாய்ப்புகள் உள்ளன. முக்கியமாக தேர்தல் நிதிப் பத்திரம், பி.எம் கேர்ஸ் நிதி தொடர்பான விசாரணைகள் தொடங்கலாம்.

அக்னிவீர் திட்டம் கைவிடப்படுவதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகலாம். மாநில ஆளுநர்கள் எல்லோரும் அல்லது பலரும் அடுத்தடுத்து அல்லது ஒரே நாளில் ராஜினாமா செய்வார்கள்.

நீட் தேர்வு ரத்து உள்ளிட்ட மாநில அரசுகளின் பல கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. பல மாநில கட்சிகள் அமைச்சரவையில் இடம்பெற வாய்ப்பு உள்ளதால் திமுக உட்பட பல கட்சிகளில் சில மாற்றங்கள் நடக்கும். மத்திய அமைச்சரவைக்கு ஏற்றபடி கட்சி பதவிகள் மாறலாம். யார் பிரதமராக வருகிறார் என்பதை பொறுத்து நாட்டின் மார்க்கெட், விலைவாசி தொடங்கி சட்ட ஒழுங்கு வரை பலவும் ஜூன் 4ம் திகதிக்கு பின் மாறும் வாய்ப்புகள் உள்ளன.

# கொல்லநுலை பேச்சியம்மன் வருடாந்த திருச்சடங்கு



மட்டக்களப்பு கொல்லநுலை அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவப் பெருவிழா நாளை 02 ஆம் திகதி திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி 05 ஆம் திகதி இடம்பெறும் தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

ஆலய பிரதமகுருமார்களான சிவஸ்ரீ ஏ.கு. தேவராசா குருக்கள், சிவஸ்ரீ தேவ சுகிர்தராஜ் ஐயா ஆகியோரின் தலைமையிலும் மற்றும் உதவிக் குரு சிவஸ்ரீ தி.தனுஸ்காந் உதவியுடன் தொடர்ந்து நான்கு நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவ நாட்களில் 03 ஆம் திகதி சாமந்தியாறு இலுப்பையடி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இருந்து தோரணம் எடுத்து வருதல் இடம்பெறும்.

04 ஆம் திகதி குழுவினமடு விநாயகர் ஆலயத்தில் இருந்து தீக்கட்டை எழுந்தருளப்பண்ணி எடுத்து வருதல், விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணல் இடம்பெறவுள்ளன.

5 ஆம் திகதி காலை 6 மணிக்கு தீமிதிப்பு, தீர்த்தோற்சவம், சர்க்கரைஅமுது ஆகியனஇடம்பெற்று உற்சவம் நிறைவு பெறவுள்ளது.

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்...**

# மதுரையில் அடுத்த வாரம் ஞாயிறன்று தமிழ் ஹைக்கூ மூன்றாவது உலக மாநாடு

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிறன்று ஒரு நாள் கவிதைத் திருவிழாவாக, ‘தமிழ் ஹைக்கூ மூன்றாவது உலக மாநாடு’ நடைபெறவிருக்கிறது. இம்மாநாடு குறித்து மாநாட்டின் ஆலோசகர் கவிஞர் மு.முருகேஷ், மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர், ‘இனிய நந்தவனம்’ இதழாசிரியர், கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் இருவரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜப்பானிய மூவரி கவிதையான ஹைக்கூ, மகாகவி பாரதியாரால் 1916 இல் தமிழில் அறிமுகமானது. கவிக்கோ அப்துல்ரகுமான், ஈரோடு தமிழன்பன், அமுதபாரதி, அறிவுமதி, மித்ரா போன்ற முன்னோடி கவிஞர்களாலும், எழுத்தாளர் சுஜாதா, சி.மணி, சந்திரலேகா, தி.லீலாவதி, நிர்மலா சுரேஷ் போன்றோர்களின் கட்டுரை மற்றும் மொழிபெயர்ப்புகளினாலும் தமிழில் பரவலாக அறிமுகமாகி, இன்றைக்கு பல்லாயிரம் தமிழ்க் கவிஞர்கள் ஆர்வத்தோடு ஹைக்கூ எழுதி வருகின்றனர்.

ஹைக்கூ கவிதைப் பற்றிய தெளிவையும் புரிதலையும் உண்டாக்கும் நோக்கில் 2022ஆம் ஆண்டில் ஜூலை 17 அன்று திருச்சியில் ‘தமிழ் ஹைக்கூ: முதலாவது உலக மாநாடு’ நடைபெற்றது. 2023இல் மே 27இல் அந்தமானில் இரண்டாவது மாநாடு நடைபெற்றது.

தற்போது மூன்றாவது உலக மாநாடு வரும் ஜூன் 9 ஞாயிறன்று மதுரையில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டினை மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், ‘இனிய நந்தவனம்’ மாத இதழ் ஆகியன இணைந்து நடத்துகின்றன.




2024 ஜூன் 9 அன்று மதுரை சட்டக்கல்லூரி அருகேயுள்ள மருத்துவர் தங்கராஜ் சாலையிலுள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தின் கவிக்கோ அரங்கில் காலை 9.30 மணிக்கு மாநாட்டினை உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநரும், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநருமான அவ்வை ந.அருள் தொடக்கி வைக்கிறார். மாநாட்டுத் தொடக்க நிகழ்வில், இலங்கையைச் சேர்ந்த இலக்கியப் புரவலரும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான ஹாசிம் உமர், தமிழ் ஹைக்கூ முன்னோடியான ஓவியக் கவிஞர் அமுதபாரதி, கவிஞர் அமரன், கவிஞர் கவிமுகில், கவிஞர் இரா.இரவி உள்ளிட்டவர் பங்கேற்று உரையாற்றவுள்ளனர்.

பல முகநூல் குழுக்கள் மற்றும் ஹைக்கூ மற்றும் இலக்கிய அமைப்புகளின் பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

பின்னர் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள ‘ஹைக்கூ வாசிப்பரங்கம்1’, ‘ஹைக்கூ பகிர்வரங்கம்’

ஆகியன அமர்வுகளில் மூத்த இளைய கவிஞர்கள் பலரும் பங்கேற்க உள்ளனர். மதிய உணவுக்குப் பின் ‘ஹைக்கூ வாசிப்பரங்கம்2’ நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அயலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் பங்கேற்கும் ‘ ஹைக்கூவும் நானும்’ எனும் அனுபவப் பகிர்வு நடைபெறுகிறது. இதில், மலேசியாவைச் சேர்ந்த ந.பச்சைபாலன், சிங்கப்பூரைச் சேர்ந்த டி.எம்.இமாஜன், ஆதிரன், இலங்கையைச் சேர்ந்த மருத்துவர் ஜலீலா முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டு அனுபவங்களைப் பகிரவிருக்கிறார்கள்.

மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள ‘ஹைக்கூ நூல்கள் வெளியீட்டரங்கில்’ மலேசியா, சிங்கப்பூர், ருந்தும், தமிழகம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்தும் பங்கேற்கும் 16க்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிஞர்களின் நூல்கள் வெளியிடப்படவுள்ளன. மூன்றாவது ஹைக்கூ மாநாட்டையொட்டி தயாராகியுள்ள ‘தூண்டில்’ ஹைக்கூ இதழின் மாநாட்டுச் சிறப்பிதழும் வெளியிடப்படவிருக்கிறது.

மாலை 5.30 மணிக்குத் தொடங்கும் நிறைவு விழாவில், அயலகத்திலிருந்து சிறப்பான முறையில் ஹைக்கூ கவிதைகளை எழுதிவரும் கவிஞர்கள் ந.பச்சைபாலன், டி.எம்.இமாஜன், ஆதிரன், ஜலீலா முஸம்மில் ஆகியோருக்கு ‘ஹைக்கூ பேரொளி’ எனும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாநாட்டு நிறைவு விழாவில், இந்திய ஹைக்கூவின் முகமாகத் திகழும் புனேயைச் சேர்ந்த கவிஞர் கலா ரமேஷ், கவிஞர் தங்கம் மூர்த்தி ஆகியோர் நிறைவுரையாற்றவுள்ளனர்.

இச்சிறப்புமிக்க மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக கலால் துறை ஓய்வுபெற்ற அதிகாரி கவிஞர் சகா (எ) கஜேந்திரன், செயலாளராக கவிஞர் மூரா, பொருளாளராக வழக்கறிஞர் வெ.கிருஷ்ணவேணி உள்ளிட்ட 20 பேர் அடங்கிய வரவேற்புக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

ஹைக்கூ கவிதைகளை எழுதும் உலகம் முழுவதுமுள்ள தமிழ்க் கவிஞர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பிக்க இருக்கிறார்கள். தமிழ் ஹைக்கூ வரலாற்றில் ஒரு மைல்கல்லாக இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

# வறிய நிலையில் உள்ள மாணவருக்கு மட்டக்களப்பு லியோ கழகம் உதவி

Waste to use திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பிரதேச மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கடதாசிகள்,பாவித்த அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கார்ட் போட் மட்டைகள் என்பவற்றை மீள்சுழற்சி செய்து அதிலிருந்து கிடைத்த நிதி மூலம் முதற்கட்டமாக மாங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் பாடசாலை உபகரணங்கள்,ஆடைகள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலதிகமாக கிடைக்கப் பெற்றுள்ள கோரிக்கைகளுக்கு அமைய எதிர்காலத்தில் ஏனைய பிரதேச மாணவர்களுக்கும் இத்திட்டம் தொடரும் எனவும், வறுமை காரணமாக மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடையில் கைவிட்டு பெற்றோருடன் கூலி வேலைகளில் ஈடுபடுவதனை எவரும் அனுமதிக்க முடியாது எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




எனவே இவ்வகையான பொருளாதாதர ரீதியில் பாதிக்கப்பட்டு எல்லோரிடமும் உதவி கேட்க முடியாத நிலையிலுள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தடையாக உள்ள காரணிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவ வசதிபடைத்த அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**



# இந்திய மக்களவைத் தேர்தலின் இறுதிக்கட்ட வாக்களிப்பு இன்று

இந்திய மக்களவைத் தேர்தலின் இறுதிக்கட்ட வாக்களிப்பான 7ஆம் கட்டத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது. எதிர்வரும் 4 ஆம் திகதி மாலை வெளியாகும் முடிவுதான் பலரின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது. 4 ஆம் திகதி அதிகாரபூர்வமாகத் தேர்தல் முடிவுகள் வெளியாகும்.

இந்தத் தேர்தலில் மோடி தலைமையிலான என்.டி.ஏ கூட்டணி வெற்றி பெற வேண்டும் என பி.ஜே.பி கட்சியினர் கனவு காணுவதை விடவும், பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். காரணம் மோடி தலைமையிலான பி.ஜே.பி தோல்வியைச் சந்தித்தால் பங்குச்சந்தை 30 சதவீதம் வரையில் சரியும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ப்ளூம்பெர்க் நிறுவனம் சந்தை ஆய்வாளர்களின் கணக்கெடுப்பின்படி, இந்தியப் பங்குச்சந்தைகள் தங்களுடைய பங்கு முதலீட்டின் வளர்ச்சி தொடர்ந்து நீட்டிக்கப்பட வேண்டுமெனில் பொதுத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான கூட்டணி 303 இடங்களுக்கு மேல் வெற்றி பெற வேண்டும் எனக் கணித்துள்ளது. இப்படி மோடியின் கட்சி எவ்வளவு ஆசனங்களில் வெற்றி பெற்றால், எவ்வளவு வளர்ச்சி அடையும், சரியும் என்பதை முதலீட்டாளர்கள் ஒன்றாக இணைந்து ஆய்வு செய்துள்ளனர்.

மேலும் இந்த ஆய்வின் முடிவில் மோடியின் வெற்றியும், தோல்வியும், பங்குச்சந்தையை மட்டும் அல்லாமல் ரூபாய் மதிப்பையும் அதிகம் பாதிக்கும் எனக் கணித்துள்ளனர். மோடி தலைமையிலான கூட்டணி 272 ஆசனங்களுக்கு குறைவான இடத்தில் வெற்றி பெற்றால் பங்குச்சந்தை 10 சதவீதம் வரையில் சரியும்.

272 இடங்களுக்கு அதிகமாகவும், 303 இடங்களுக்குக் குறைவாகவும் வெற்றிபெற்றால் 2 சதவீதம் வரையில் குறையும். இதுவே 303 ஆசனங்களுக்கு அதிகமாக இடத்தில் மோடி தலைமையிலான NDA கூட்டணி வெற்றிபெற்றால் பங்குச்சந்தை 4 சதவீதம் வரையில் உயரும்.

மோடி இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றாலும், இந்தியப் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த மிகவும் அவசியமான மற்றும் முக்கியமான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் தொழிலாளர் கொள்கையில் கடுமையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கான அவசியம் உள்ளது.

முதலீட்டாளர்கள் மோடியை மூன்றாவது முறையாக வெற்றிபெறுவதை ஆதரிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தில், பிரதமர் மோடி 3 நாட்கள் தியானம் செய்துள்ளார். இதன் பின்னணி என்ன என்பது குறித்து சில தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்வாறுதான் கடந்த 2014 இல் மஹாராஷ்ட்ராவின் பிரதாப்கர் கோட்டையிலும், 2019 இல் உத்தரகண்டின் கேதார்நாத் குகையிலும் பிரதமர் மோடி தியானம் செய்தார். இந்த முறை தேர்தலில் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை அவர் தெரிவு செய்திருக்கிறார். இதற்கு அரசியல் காரணங்களும், ஆன்மீக காரணங்களும் மாறி மாறி சொல்லப்படுகின்றன.



விவேகானந்தர் நினைவு மண்டபப் போராட்டம் என்பது, 1962 முதல் 1970 வரை, ஆர்.எஸ்.எஸ் ஜனசங்கம் உள்ளிட்ட சங்பரிவார் அமைப்புகளின் இடைவிடாத போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

அயோத்தி இராமர் கோவில் போராட்டத்திற்கு ஊக்கம் தந்ததே, இந்தப் போராட்டம் என்பதால், பிரதமர் மோடி இங்கு தியானம் செய்துள்ளார். சுவாமி விவேகானந்தர், பாரத மாதாவை தரிசனம் செய்த இடம் கன்னியாகுமரியாகும். பார்வதி தேவியும், அதே இடத்தில் பகவான் சிவனுக்காக காத்திருந்தபடி, ஒரே காலில் தியானம் செய்தார் என்று இந்து மத மக்கள் நம்புகின்றனர்.

கடலில் அமைந்துள்ள இந்தப் பாறை, சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, அதே இடத்தில் தியானம் செய்ததன் வாயிலாக, விவேகானந்தரின் வளர்ந்த இந்தியாவின் பார்வையை உயிர்ப்பிக்க செய்வதில், பிரதமர் மோடியின் அர்ப்பணிப்பை காட்டுகிறது என்கிறார்கள்.

விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைத்த வரலாற்றில், மேற்கு வங்கத்திற்கும் முக்கிய பங்கு உள்ளதால், பிரதமர் இங்கு தியானம் செய்ததாகவும், இது மேற்கு வங்கத்தில் தாக்கத்தை தரும் என்றும் கூறுகிறார்கள். இந்திய பெருங்கடல், வங்காள விரிகுடா, அரபிக்கடல் போன்ற அனைத்துமே சங்கமிக்கும் இடம் கன்னியாகுமரி. எனவே, தேச ஒற்றுமையை வலியுறுத்தவே, இங்கு தியானம் செய்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த முறை கேதார்நாத் குகையில் தியானத்துக்கு பிரதமர் சென்றிருந்தார். அதற்கு பிறகே 59 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. அதில் பெரும்பாலான இடங்களை பா.ஜ.கவும் கைப்பற்றியது. ஆனால், இந்த முறை பா.ஜ.கவுக்கு கள நிலவரம் அந்த அளவுக்கு ஆதரவாக இல்லை. குறிப்பாக, உத்தரப்பிரதேசத்தில் 13 இடங்களில் மட்டுமே நம்பிக்கை கிடைத்திருப்பதாகவும், மற்றைய இடங்கள் சாதகமாக இல்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன. அதுபோல, பீகாரும் பா.ஜ.கவுக்கு சாதகமாக இல்லை.

இதில் குறைந்தது 30 இடங்களை யாவது பெற வேண்டுமென பா.ஜ.க நினைப்பதால், இப்படியொரு தியானம் நடத்த பிரதமர் முடிவு செய்திருப்பதாக கூறுகிறார்கள்.

தேர்தல் முடிந்த பிறகும், பிரதமர் மோடி தமிழகத்திற்கு வருகிறார் என்றால், அது தமிழகத்தின் மீதான மோடியின் ஆழ்ந்த அர்ப்பணிப்பையும், அன்பையும் காட்டுகிறது என்கிறார்கள் மற்றொரு தரப்பினர். இதைத்தவிர இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. அதாவது இன்று இந்தியா கூட்டணி தங்களது கூட்டத்தை நடத்துகின்றது. இதனால், நாட்டின் கவனம் முழுக்க இந்தியா கூட்டணி மீதே குவியும்.


இந்தக் கவனத்தை திசைதிருப்பும் வகையில், கன்னியாகுமரி தியான நிகழ்ச்சி இருக்க வேண்டும் என்பதற்காகவே, இப்படியொரு திட்டம் என்கிறார்கள்.

இன்னும் இப்படி எத்தனையோ காரணங்கள் யூகங்களாக வலம்வந்து கொண்டிருக்கின்றன. இதில் எது உண்மை என்று தெரியவில்லை. அதேசமயம் இத்தனை அரசியல் எதிர்ப்புகளையும் மீறி, நடுக்கடலில் தியானம் செய்வது, பா.ஜ.கவுக்கு சாதகமான முடிவை தேர்தலில் பெற்றுத் தருமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்தல் முடிவுக்காக உலகமே காத்திருக்கின்றது!**

# பதினோராவது உலக நீர் மன்றத்தை நடத்துவதற்கு சவூதி தீர்மானம்

11 ஆவது உலக நீர் மன்றத்தை 2027ஆம் ஆண்டில் சவூதி அரேபியா நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது இந்தோனேசியாவில் நடைபெற்ற உலக நீர் மன்றத்தின் 10 ஆவது அமர்வின் நிறைவு விழாவின் போது அறிவிக்கப்பட்டது. இதில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்கள் அமைச்சர்கள் 160 நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பல்வேறு சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.




11ஆவது உலக நீர் மன்றம் 'ஒரு சிறந்த எதிர்காலத்திற்கான நடவடிக்கை' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளதோடு, உலகளாவிய நீர் சார்ந்த பிரச்சினைகளை அனுகுவதிலும் பிராந்திய மற்றும் சர்வதேச நீர் முன்முயற்சிகளை ஆதரிப்பதிலும் மற்றும் சவூதி அரேபியாவின் விஷன் 2030 திட்டத்துடன் இணைந்த நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி செயற்படுவதிலும் அந்நாட்டுத் தலைமையின் ஆர்வத்தை பிரதிபலிக்கிறது.

அந்நாட்டுச் சுற்றுச்சூழல் அமைச்சர் அப்துல் ரஹ்மான் அல்ஃபத்லி இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், சவூதி தலைமையின் குறிப்பிடத்தக்க ஆதரவும் வழிகாட்டல்களும் நீர் துறையில் சவூதியின் தரத்தை சர்வதேச ரீதியாக உயர்த்தியுள்ளது. இது குறிப்பிடத்தக்க இந்த உலகளாவிய மன்றத்தை நடத்துவதற்கான வாய்ப்பிற்கு வழிவகுத்துள்ளது என்று குறிப்பிட்டார்.




உலகளாவிய நீர் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்காக சர்வதேச ஆதரவைப் பெறவும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைக்கவும் ரியாத் நகரில் உள்ள உலக நீர் அமைப்பை அந்நாட்டு பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிறுவியமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**காலித் ரிஸ்வான்...**

# மின்சார வாகன பாவனையை அதிகரிப்பதில் கூடுதலான கவனம் செலுத்தும் இந்தியா

## எரிபொருள் தேவை படிப்படியாக குறையப் போகின்றது

இந்தியாவில் மின்சார வாகனங்களை (Electric Vehicles) பிரபலமாக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. பெட்ரோல் (Petrol) மற்றும் டீசல் (Diesel) இறக்குமதியை குறைக்க வேண்டும் என்பதுதான் இதற்கு மிக முக்கியமான காரணம் ஆகும்.

தற்போதைய நிலையில் உலகிலேயே மசகு எண்ணெயை (Crude Oil) அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. மசகு எண்ணெய்தான், பெட்ரோல் மற்றும் டீசலின் மூலப்பொருள் ஆகும். அதிகளவிலான மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதால், இந்தியாவின் பொருளாதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது.

மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம், மசகு எண்ணெய் இறக்குமதியை குறைக்கலாம். இதன் விளைவாக இந்தியாவின் பொருளாதாரம் பாதுகாக்கப்படும் என அரசு நம்புகிறது. அத்துடன் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும் என்பது அரசின் நம்பிக்கையாக உள்ளது.



இந்த 2 முக்கியமான காரணங்களால்தான், இந்தியாவில் மின்சார வாகனங்களின் பயன்பாடு மிக வேகமாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் போதிய அளவில் சார்ஜிங் ஸ்டேஷன்கள் (Charging Stations) இருந்தால் மட்டுமே எலெக்ட்ரிக் வாகனங்களை வாங்க மக்கள் முன் வருவார்கள். எனவே எலெக்ட்ரிக் வாகனங்களுக்கான சார்ஜிங் ஸ்டேஷன்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பணிகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய அரசு, மாநில அரசுகள், அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்பில் மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் ஸ்டேஷன்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் இந்தியாவில் சார்ஜிங் ஸ்டேஷன்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் பணிக்காக 2 பிரபலமான நிறுவனங்கள் தற்போது கூட்டணி அமைத்திருக்கின்றன.



அவை எம்.ஜி இந்தியா (MG India) மற்றும் எச்.பி.சி.எல் என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கோர்ப்பரேஷன் லிமிடெட் ஆகியவை ஆகும். இந்த 2 நிறுவனங்களும் 50kW/60kW DC ஃபாஸ்ட் சார்ஜர்களை அமைக்கவுள்ளன. நகரங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளின் முக்கிய இடங்கள் கண்டறியப்பட்டு இந்த சார்ஜிங் ஸ்டேஷன்கள் அமைக்கப்படும். எலெக்ட்ரிக் வாகன உரிமையாளர்களுக்கு இந்த சார்ஜிங் ஸ்டேஷன்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என எம்ஜி இந்தியா மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய 2 நிறுவனங்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

இது குறித்து எம்ஜி இந்தியா நிறுவனத்தின் தலைமை வளர்ச்சி அலுவலர் கௌரவ் குப்தா கூறுகையில், "வலுவான சார்ஜிங் உள்கட்டமைப்பு வசதிகள்தான், எலெக்ட்ரிக் வாகனங்களுக்கு மாறுவதற்கான முக்கிய தேவை ஆகும்" என்றார்.

எலெக்ட்ரிக் வாகன உரிமையாளர்களும், எலெக்ட்ரிக் வாகனங்களுக்கு மாற திட்டமிட்டுள்ளவர்களும் இந்த நடவடிக்கைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே டாடா மோட்டார்ஸ் (Tata Motors) போன்ற நிறுவனங்களும், இந்தியாவில் எலெக்ட்ரிக் வாகனங்களுக்கான சார்ஜிங் ஸ்டேஷன்களின் எண்ணிக்கையை உயர்த்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்த விஷயத்தில் எம்ஜி இந்தியா நிறுவனமும் தீவிரமாக பணியாற்றி வருவது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இது போன்ற தொடர்ச்சியான நடவடிக்கைகளின் மூலமாக இந்தியாவில் எலெக்ட்ரிக் வாகனங்களின் பயன்பாடு அதிகளவில் உயரும் என எதிர்பார்க்கலாம். எலெக்ட்ரிக் வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து விட்டால், வெளிநாடுகளில் இருந்து இந்தியா இறக்குமதி செய்யும் மசகு எண்ணெயின் அளவு குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

### வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள

# பல்கலை கல்விசாரா ஊழியர்களுடன் எதிர்வரும் திங்கள் பேச்சுவார்த்தை

## உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களுடன் எதிர்வரும் திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் சிறந்த தீர்வை வழங்க தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன்

"தற்போது பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இது ஒரு துரதிஷ்டவசமான விடயமாகும். ஏனென்றால் இதன் ஊடாக எதிர்கால சந்ததியினரான மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் நாளாந்தம் சுமார் 150 மில்லியன் ரூபா நேரடியான நட்டம் ஏற்படுகின்றது. இது நிதி ரீதியிலான நட்டம் மாத்திரமே. மனித நேரமும் இதன் மூலம் வீணடிக்கப்படுகிறது. எனவே இன்னும் ஒரு மணித்தியாலத்தையேனும் வீணடிக்க அரசாங்கத்திற்கு தேவையில்லை. பெற்றோர் என்ற வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதன் பாதிப்பு தெரியும் என்று நினைக்கிறேன். எனவே அவர்களும் இதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல விரும்பமாட்டார்கள். இதற்கு சரியான தீர்வை எவ்வாறு தேடுவது என்பதையே நாம் இப்போது பார்க்க வேண்டும். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு நிறைவேற்ற சுமார் 1.1 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. நான் இது பற்றி விரிவான அறிக்கையொன்றை தருமாறு கேட்டிருக்கின்றேன். மேலும் நாம் எவ்வாறு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பது குறித்து நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன். நான் எதிர்வரும் திங்கட்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன்.

## AI போன்ற நவீன...

செயற்கை நுண்ணறிவை உள்வாங்குவதே இதன் நோக்கமாகும் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, பல்கலைக்கழகங்கள் மீது இது குறித்த பரந்த பொறுப்பு சார்ந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் AI தொழில்நுட்பம் அல்லது செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்துவது தொடர்பில் பல்கலைக்கழக கல்வியாளர்களுடன் நேற்று முன்தினம் (30) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாப்பதற்கு இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தை விரைவாக ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்றியமைக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வெளிநாட்டுக் கடனை செலுத்துவதற்கு 2027 2040ஆம் ஆண்டு வரை கால அவகாசம் இருப்பதாகவும், 2035ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறான சமூக, பொருளாதார மாற்றத்துக்காக நவீன தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2035ஆம் ஆண்டளவில் உருவாக்கப்படும் புதிய பொருளாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு AI இன் வகிபாகம் முதன்மையாக இருக்க வேண்டுமென் என்பதோடு, நவீன தொழில்நுட்பத்தில் தெற்காசியாவின் அடையாளமாக இலங்கையை மாற்றுவதற்கான இயலுமை காணப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். AI தொழில்நுட்பம் அல்லது செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் பலவற்றின் பேராசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களினால் கூட்டாக தயாரிக்கப்பட்ட பிரேரணையும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பல பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே AI தொழில்நுட்பத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டிய கல்வியாளர்கள், அந்த திட்டங்களின் செயல்பாடு மற்றும் இலக்குகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க:

"இலங்கை தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடைய வேண்டும். நவீன தொழில்நுட்பத்தை பொறுத்தவரை நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். பொருளாதார நன்மைகளை அடைய தொழில்நுட்ப அறிவு போதுமான அளவு பயன்படுத்தப்படவில்லை. அண்மைக்காலமாக செயற்கை நுண்ணறிவு AI தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்துகிறது. அதிலும் நாம் பின்தங்கியிருக்க முடியாது.

நாம் செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறினால் மற்ற தொழில்நுட்பங்களையும் பயன்படுத்த முடியும். செயற்கை நுண்ணறிவுக்குள் பல தொழில்நுட்பங்கள் உள்ளடங்கியுள்ளன. அதனை நாம் பயன்படுத்தும் விதத்தை பொறுத்தே ஒரு நாடு என்ற வகையில் முன்னேற்றத்தை அடையலாம். முன்பு நாம் தகவல் தொழில்நுட்பத் துறையில் செய்த தவறை மீண்டும் செய்ய முடியாது. தகவல் தொழில்நுட்பத் துறை திட்டங்களில் பயன்படுத்துவது குறித்து மாத்திரமே இதுவரையில் கவனம் செலுத்தியிருக்கிறோம். அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அதன் பலனாகவே தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு சில நாடுகளை விடவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம்.

1984ஆம் ஆண்டு நான் நாட்டில் கணினி கல்வியை அறிமுகப்படுத்திய போது சின்க்கிளேயார் கணினிகளை அறிமுகப்படுத்தியிருந்தோம். அதனை நாங்கள் சரியாக செய்யவில்லை. அதற்காக நீண்ட காலத்தை செலவிட்டோம். அந்த அனுபவங்களை பாடமாக கொள்ள வேண்டும்.

அதன்படி நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை விரிவுபடுத்துவதற்கான செயற்பாடுகளை தொழில்நுட்ப அமைச்சு முன்னெடுத்து வருகிறது. டிஜிட்டல் மாற்றத்துக்கான முகவர் நிறுவனத்தை நிறுவது தொடர்பிலும் ஆலோசிக்கிறோம். டிஜிட்டல் மயமாக்கல் மூலம் சமூக, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் டிஜிட்டல் பொருளாதாரத்தையும் கட்டமைக்க முடியும்.

பொருளாதார ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்கள் இந்த விடயத்தில் முன் நின்று செயற்படும். அத்தோடு டிஜிட்டல் மாற்றத்துக்கான முகவர் நிறுவனமும் ஸ்தாபிக்கப்படும். இதற்குள் தேசிய செயற்கை நுண்ணறிவு மையம் என்ற சுயாதீன நிறுவனமும் ஸ்தாபிக்கப்படும். அதற்கான பணிப்பாளரும் பணிப்பாளர் சபையொன்றும் நியமிக்கப்படும்.

இந்த நிறுவனங்களை நிறுவுவதற்கான சட்ட வரைவு உருவாக்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப மேம்பாட்டு சபையும் காணப்படுகிறது. அதேபோல் வணிக ஆராய்ச்சியை ஊக்குவிக்க நிதியளிப்போம். நாம் செய்யும் முதலீடுகளில் இலாபம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். நாம் வெற்றியடைவதற்கான ஒரே வழியாக இதனை மட்டுமே சொல்ல முடியும். இந்த டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும், அதில் பெரும் பகுதி பயன்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் அடுத்த ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்வோம். இத்திட்டத்தில் முடிந்த அளவில் தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம்.

செயற்கை நுண்ணறிவை (AI) விரிவுபடுத்த பாடசாலைகளுக்குள் AI சங்கங்களை (AI Societies) தொடங்குமாறு அறிவுறுத்தியுள்ளேன். மேலும், பல்கலைக்கழகங்களில் செயற்கை நுண்ணறிவை அதிகபட்சமாக பயன்படுத்த வேண்டும். முக்கியமாக தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு 4 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ திட்டமிட்டுள்ளோம். பொறியியல் பீடங்கள் இல்லாத பல்கலைக்கழகங்களில் பொறியியல் பீடங்களைத் ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்த 05 ஆண்டுகளில் அதிகபட்சமாக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதே எமது இலக்காகும். இத்திட்டம் அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

## பல்கலை அனுமதிக்கு...

பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையுடைய பாடசாலை பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 151,343 ஆகவும், பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையுடைய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 22,101 ஆகவும் உள்ளது. அதன்படி பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையுடைய மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 173,444 ஆகவும் இது 64.33 சதவீதமாகும். பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 229,057, பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எண்ணிக்கை 40,556. அதன்படி பரீட்சைக்குத் தோற்றிய மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2,69,613 ஆகும். நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையுடைய மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 173,444 ஆக பதிவாகியுள்ளது.

பெறுபேறு நிறுத்தப்பட்ட பாடசாலை பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 146 ஆகவும் பெறுபேறு நிறுத்தப்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 44 ஆவதுடன் பெறுபேறு நிறுத்தப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 190 ஆகவும் காணப்படுகிறது.

பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk ஆகியவற்றிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். பெறுபேறுகள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து 24 மணி நேரத்துக்குள், சகல பாடசாலை, தனிப்பட்ட பரீட்சார்த்திகள் http://onlineexams.gov.lk/eic எனும் இணைப்பினூடாக தேசிய அடையாள அட்டை எண்ணை உட்செலுத்தி பெறுபேற்று அட்டவணையை (Results Schedule) தரவிறக்கம் செய்து கொள்வதற்கும், பார்வையிடுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சகல அதிபர்களுக்கும் http://onlineexams.gov.lk/eic எனும் இணைப்பினூடாக பெறுபேற்றை பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் ((User Name) (Password)) என்பவற்றை பயன்படுத்தி பாடசாலைகளில் பெறுபேற்று அட்டவணைகளை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளன. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் (User Name) (Password)) என்பவற்றை பயன்படுத்தி http://onlineexams.gov.lk/onlineapps/index.php/welcome/onlineresults எனும் இணைப்பினூடாக பெறுபேற்றை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். தங்களது மாகாண / வலயத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் பெறுபேறுகளை பார்வையிடவும், தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும். பாடசாலைகளின் பரீட்சை பெறுபேற்று அட்டவணை பாடசாலை அதிபர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறு வெளியிடப்பட்ட பின்னர் அனுப்பி வைக்கப்படும். பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக http://onlineexams.gov.lk/eic எனும் இணைப்பினூடாக 2024.06.05 ஆம் திகதி தொடக்கம் 2024.06.19 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விசாரணைகளுக்கு பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பெறுபேற்றுக் கிளை இலக்கங்களாவன 011 2784208, 011 2786616, 011 2784537, 011 2785922, பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக்கிளை இலங்களாவன 011 2785231, 011 2785216, 011 2784037, நிகழ்நிலை அலகு இலக்கம் 011 3671568, துரித அழைப்பு இலக்கம் 1911, மின்னஞ்சல் முகவரி gcealexam@gmail.com

## 2024 வரவு, செலவு...

படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் தனக்கு வழங்கப்படவில்லையென தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதியிடம் மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கென தன்னால் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கியது போல் தனக்கும் அனுமதி வழங்குமாறு நேரில் கோரியிருந்தேன்.

அதன்போது நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஜனாதிபதியின் உதவிச் செயலாளரை அழைத்து நிதி ஒதுக்கீடு ஏன் செய்யப்படவில்லை எனக் கேட்டதுடன், நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்பாடு செய்யுமாறும் அறிவுரை வழங்கியிருந்தார். இவ்வாண்டு வரவு, செலவுத் திட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐம்பது மில்லியன் ரூபா நிதி அபிவிருத்தி திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## அஜித் நிவாட் கப்ரால்...

அஜித் நிவாட் கப்ரால் உட்பட 05 பிரதிவாதிகளை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு (CIABOC) ஐந்து நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

நாடு கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளை 2012ஆம் ஆண்டு தென்கிழக்கு ஐரோப்பிய கிரீஸ் நாட்டின் திறைசேரி பத்திரங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்ததாக சேனசிங்க தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

கிரீஸ் எதிர்கொண்டிருந்த நிதி நெருக்கடியை அறிந்திருந்தும் மத்திய வங்கி இந்த கொள்வனவை செய்ததாக குற்றம் சுமத்தியிருந்த சேனசிங்க, இதன் விளைவாக இலங்கை அரசாங்கத்துக்கு 1.84 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இந்த ஐவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

அஜித் நிவாட் கப்ரால், கங்காணம்கே கமகே டொன் தர்மசேன தீரசிங்க, பெந்தரகே டொன் வசந்த ஆனந்த சில்வா, சந்திரசிறி ஜயசிங்க பண்டித சிறிவர்தன மற்றும் ஹரங்கஹா ஆராச்சிலாகே கருணாரத்ன ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடமேல் மாகாணத்தில்...

சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டீ.வெங்கடேஸ்வரன் தலைமையில் அமெரிக்காவில் தலைமையகத்தை கொண்டியங்கும் போர்ட்ரஸ் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் (30), வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டை சந்தித்து வடமேல் மாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்தாலோசித்தனர்.

இதன்போது வடமேல் மாகாணத்தை இலங்கையின் கால்நடை உற்பத்தித் துறையின் மையப்புள்ளியாக மாற்றும் வகையிலான சகல வளங்களும் காணப்படுவதாகவும், முதலீட்டாளர்களுக்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்தார்

தகவல் தொழில்நுட்பம், இயற்கை எரிவாயு உற்பத்தி, ஹைட்ரஜன் வாயு உற்பத்தி போன்றவற்றை மேற்கொள்ளும் வகையிலான பாரிய தொழிற்சாலைகளை வடமேல் மாகாணத்தில் நிறுவுவதற்கான விருப்பத்தை வெளியிட்ட இந்திய முதலீட்டாளர்கள், அதற்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதேபோன்று எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி சுமார் 70க்கும் குறையாத இந்திய முதலீட்டாளர்கள் குழுவொன்றை அழைத்து வந்து, வடமேல் மாகாண முதலீடுகள் குறித்து ஆய்வொன்றை நடத்தவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்

இந்தச் சந்திப்பின் போது இந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டீ.வெங்கடேஸ்வரன், வடமேல் மாகாண பிரதம செயலாளர் தீபிகா குணரத்தின, ஆளுநரின் செயலாளர் இலங்கக்கோன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## நாட்டில் முட்டைகளின்...

பாவனை 70 இலட்சம் எனவும் கடந்த சில மாதங்களில் இத்தொகை 80 இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தோட்டக் கம்பனிகள்...

*சமர்ப்பணங்கள் மீதான பரிசீலனை எதிர்வரும் 03ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. அக்கரப்பத்தன பெருந்தோட்டக் கம்பனி உட்பட 21 தோட்டக் கம்பனிகளினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

## பயங்கரவாத புலனாய்வு...

டுபாயிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

மிதிகம ருவன் என்ற இந்த நபர், கொழும்பு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் டுபாயில் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு நேற்று (31) அதிகாலை அழைத்து வரப்பட்டுள்ளார்.

## 06 மாதங்கள் முதல்...


இந்த திரிபோஷாவை நிபந்தனையுடன் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்


## (01.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)




**மேஷம்:**
*குடும்பம் சீராக நடந்து வரும். சிறு சிறு பிரச்சனைகள் காணப்பட்டாலும் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. கலைஞர்கள் பணி நிமிர்த்தமாக வெளியூர் பயணிப்பர்.*




**ரிஷபம் :**
*புதிய கிளை தொடங்க கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவார்கள்.*



**மிதுனம்:**
*குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்படும். கலைஞர்கள் அதிக வருமானம் தரும் ஒப்பந்தங்களை பெற முயற்சிப்பார்கள்.*



**கடகம்:**
*சிலருக்கு அலுவலகத்தில் புதிய பொறுப்புக்கள் கிடைக்கக்கூடும். கலைஞர்கள் பிரபல நிறுவனத்தின் ஒப்பந்தம் பெற்று உற்சாகமாக பணியாற்றுவர்.*




**சிம்மம்:**
*நவீன பொருட்களை வாங்கி இல்லத்தை அழகு படுத்துவீர்கள். பெண்களின் முயற்சியால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.*



**கன்னி:**
*கலைஞர்கள் சக கலைஞர் மூலம் புதிய ஒப்பந்தங்களை பெறுவார்கள், பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும்.*




**துலாம்:**
*அதிக மூலதனத்துடன் வரும் நபரை கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் முன்னேற்றம் காணப்படும்.*



**விருச்சிகம்:**
*குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கு முன்னேற்பாடுகளை செய்வீர்கள். குலதெய்வ வழிபாடு செய்ய திட்டமிடுவீர்கள். பெண்களுக்கு சேமிப்பு பெருகும்.*



**தனுசு:**
*குடும்பத்தில் அவ்வப்போது சில பிரச்சினைகள் தலைகாட்டும். பெண்களுக்கு சேமிப்பு கரையலாம். கலைஞர்கள் பணிகளில் கவனமாக செயல்படுங்கள்.*



**மகரம்:**
*கடன் தொல்லைகளை சமாளிக்க புதிய கடன் வாங்க நேரலாம். கலைஞர்களில் சிலருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். வருமானம் அதிகரிக்கும்.*



**கும்பம்:**
*விருந்தினர் வருகையால் செலவு கூடும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவர். பங்குச் சந்தையில் போதிய வருமானம் உண்டு.*



**மீனம்:**
*கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரத்தில் அதிக லாபம் ஏற்படும். புதிய கிளைகள் தொடங்குவது பற்றி ஆலோசிப்பீர்கள். குடும்பம் சீராக நடைபெறும்.*

## உரிய வழித்தட அனுமதி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

*அத்துடன் விவசாய நடவடிக்கைக்காக அகழ்வு பணிகளில் ஈடுபடுவோருக்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனுமதிப்பத்திர விதிமுறைகள் உரியவாறு பின்பற்றப்படுகின்றதா எனத் தொடர் கண்காணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரிகளுக்கு இதன்போது பணிப்புரை விடுக்கப்பட்டது .*

*அத்துடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு மண் கொண்டு வருவதைத் தடை செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.*

## ஆறு அதிசொகுசு...

கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்று (31) உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஜீப் வண்டிகள் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து வாகனப் பதிவு கணினி கட்டமைப்பிலுள்ள தரவுகளை நீக்கி முறைகேடாக பதிவு செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு முறைப்பாடுகளை முன்வைத்து விடுக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பித்துள்ளதுடன், இந்த வண்டிகளை ஏழாம் திகதிக்கு முன்னர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்குமாறு உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்று மொன்டெரோ ரக ஜீப் வண்டிகள் மற்றும் மூன்று லேன்ட்குறுஸ் ஜீப்புகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

## மாலைதீவு வெளிநாட்டமைச்சர்...

அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது தூதுக் குழுவினர் தமது விஜயத்தின் போது, அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ இரு தரப்பு கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜமீரின், இவ்விஜயத்தின் போது மாலைதீவு வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## அரிசியில் புதிய...

பாராளுமன்ற சிறுவர் ஒன்றியம், அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தலைமையில் அண்மையில் (22) பாராளுமன்றத்தில் கூடிய போதே இவ்விடயம் தொடர்பாக அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அதில் பாதி தொகையை அரசாங்கம் வழங்கினால் மீதிப் பணத்தை உலக உணவுத் திட்டம் வழங்கத் தயாராக இருப்பதாக லங்கா திரிபோஷ நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாக பாராளுமன்ற சிறுவர் ஒன்றியம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

அத்துடன் திரிபோஷா உற்பத்திக்காக உயர்தர சோளத்தை பயிரிட வேண்டியதன் அவசியம் குறித்தும், திரிபோஷ உற்பத்தி காலம்வரை அந்த தரத்தை பேணிச் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் நீண்ட நேரம் இங்கு கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் லங்கா திரிபோஷா நிறுவனத்தின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ சிதைவுகள்...

இவை காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 2021ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்து எரிந்தது. அதிலிருந்த இரசாயன பொருட்கள் கடலில் கலந்தன. இதனால் கடல் நீரும் சுற்றுச்சூழலும் கடுமையாக பாதிக்கப்பட்டன. கடந்த காலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள கடற்பரப்பில் ஆமைகள் உள்ளிட்ட ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் இறந்ததுடன், அவை கடற்கரை பகுதியில் காணப்பட்டன.

## இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு...

சுற்றுச்சூழலிலிருந்து ஒட்சிசனை எடுத்துக்கொள்ளும் `கார்னியா’ எனப்படும் கருவிழிப்படலம், இரத்தமில்லாத திசுவால் ஆனது. இதனை, தானமாக கொடுப்பவருக்கோ, அதனைப் பெற்றுக் கொள்பவருக்கோ, மருத்துவ ரீதியாக எந்தவொரு பொருத்தமும் வேண்டியதில்லை. அவை இயல்பாகவே எவருக்கும் ஏற்புடையதாகிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூஸா சிறைச்சாலையில்...

சுமார் இரண்டு மணி நேரம் இந்த சோதனை நடவடிக்கை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மழை

# தோட்டத்தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

மலையக தோட்டங்களில் பல வாரங்களாக பெய்து வரும் கடும் மழை மற்றும் காற்றினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தோட்டத்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சில வாரங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தினசரி தோட்டவேலைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், மழை மற்றும் பலத்த காற்று காரணமாக தோட்ட வேலைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக மரங்கள் முறிந்து விழும், மண்திட்டுகள் சரிந்து விழும் அபாயம், குளவிகள் தாக்கும் அபாயம் போன்றவை காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வயதான தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தோட்டத்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் கடும் காற்று காரணமாக பல தோட்ட வீடுகளின் கூரைத் தகடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் மின்சாரம் துண்டிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளதாக தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கின்றனர்.

மலைச்சாரல்

# உடரதல்ல தோட்ட தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை இ.தொ.கா தொழிற்சங்க நடவடிக்கை



உடரதல்ல தோட்ட தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரும் இ.தொ.கா பொது செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டம் நானுஓயா உடரதல்ல தோட்டதொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டை கண்டித்து கடந்த ஒருமாத காலமாக பணிபகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேநேரத்தில் உடரதல்ல தோட்டத்தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையிலான பிரச்சினை தொழிற்சங்க பிரச்சினையாகும்.

இப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்ள தொழிற்சங்கம், தோட்ட நிர்வாகம் மற்றும் தொழில் திணைக்களம் இணைந்து தீர்வுகளை பெறவேண்டும் மாறாக தொழிலாளர்களுக்கு எதிராக தொழிற்சங்க பிரச்சினையில் பொலிஸார் தலையிடுவதை தவிர்த்து கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.

# தரமான கல்விக்கான சர்வதேச மாநாடு





இந்தியாவின் தலைநகர் புது டெல்லியில் இயங்கும் டொக்டர் கலாம் பவுண்டேசன், தரமான கல்விக்கான ஆசிய அமைப்பு ஆகியவை இணைந்து நடாத்திய 'தரமான கல்விக்கான சர்வதேச மாநாடு' அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பிரபல கல்லூரிகளின் அதிபர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

இங்கு கல்வி தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கிணங்க இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கொத்மலை கல்வி வலயத்துக்குட்பட்ட பூண்டுலோயா (சீன்) விவேகானந்தா இந்துக் கல்லூரிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கொத்மலை வலயக்கல்வி



பணிப்பாளர் பனாங்வில, பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் சமரசிங்க மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# இரண்டு மாணவர்களுக்கிடையில் மோதல்

ஒருவர் படுகாயம்

(பொகவந்தலாவ நிருபர்)

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவ பிரதேச பாடசாலையொன்றில் இரண்டு மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒரு மாணவன் தாக்குதலுக்குள்ளான நிலையில் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தார்.

மாணவனை சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

பொகவந்தலாவ பிரதேச பாடசாலையொன்றில் பாடசாலை முடிந்து வீடு திரும்பும் போதே இரண்டு மாணவர்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது மோதலாக மாறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் தாழ்நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கடும் மழை காரணமாக தொடர்ந்து களுகங்கை பெருக்கெடுத்த வண்ணமுள்ளது. இதனால் இரத்தினபுரி பிரதேசத்தில் பல தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று வரை இரத்தினபுரியிலிருந்து கிராமங்களுக்குச் செல்லும் பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.



எலபாத ரத்தல்ல தம்புலுவனா வீதிகளில் 1 1/2 அடி உயரம் வரை நீர் காணப்படுகிறது. நேற்றுமுன்தினம் இரத்தினபுரி தம்புலுவன போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

மேலும் ஹல்தொல கஹங்கம ஹெரலியவத்த கரங்கொடா வீதிகளின் சில இடங்களில் சுமார் 2 அடி வரை உயர்ந்திருந்த நீர் முழுமையாக வடியவில்லையென இரத்தினபுரி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சடலம் மீட்பு

மதுக்கடையிலிருந்து ஒருவர் சடலமாக பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். பிபில பொலிஸாருக்கு நேற்று முன்தினம் காலை கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் போகஹமடித்த ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவராவார்.

உயிரிழந்தவர் மதுபானக்கடை ஒன்றை நடத்திவருவதாகவும், ஊழியர் ஒருவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர், ஊழியர் இரும்பு கம்பியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வடக்கின் உதயம்





சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த தேர்திருவிழா அண்மையில் இடம்பெற்றபோது சுவாமி தேருக்கு எழுந்தருள்வதையும் தேர் வீதிவலம் வருவதையும் காணலாம்

புதைத்தல், போதைக்கு எதிராக

# மன்னாரில் கவனயீர்ப்பு மரதனோட்டப்போட்டி

(தலைமன்னார் விஷேட நிருபர்)

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மரதனோட்டப் போட்டியை மன்னாரில் நடாத்தியது.

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'போதைக்கும் புகைத்தலிற்கும் முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருள்களின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது.

இப்போட்டியானது நேற்று (31) காலை 7 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு தாராபுரம் மற்றும் கீரி என்னும் கிராமத்துக்கு ஊடாக மீண்டும் மன்னார் மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

முதல் 10 இடங்களுக்குள் வந்த வீரர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்கள் அரசாங்க அதிபரால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் பிரதம உள்ளக கணக்காய்வாளர், திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி திணைக்கள முகாமையாளர், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு கொடியேற்றல் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும். நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

நற்கருணைப் பெருவிழா 12 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும். புனிதரின் திருவிழா திருப்பலி 13 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும், திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கும் இடம்பெறும்.

திருச்சூருப தேர்பவனி அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் என ஆலய பங்குத்தந்தை அருட்பணி எம்.ஜெறோ செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

# போதைப் பொருளுக்கு எதிராக யாழில் கவனயீர்ப்பு பேரணி

(யாழ். விசேட நிருபர்)



போதைப் பொருளுக்கு எதிரான கவனயீர்ப்பு பேரணியொன்று "போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். 'வலுவான தேசமொன்றை நிதமும் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் இப்பேரணி நேற்று நடைபெற்றது.

நல்லை ஆதீனத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இப்பேரணியானது அங்கிருந்து நல்லூர் பிரதேச செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

இதன்போது மகிழ்ச்சியான குடும்பத்துக்கு புகைத்தலே முதல் எதிரி, இளைஞர்களின் ஆண்மையை இல்லாது செய்யும் புகைத்தல் எதற்கு, புகைத்தலை கைவிடு உனது வாழ்வில் மகிழ்ச்சி இருமடங்காகும், மானிடத்தின் உயிர்கொல்லி மதுவே நீ ஒழிக, அதிகரித்த இளவயது விவாகாரத்திற்கு காரணம் போதைப்பொருளே, போதைப்பொருளை கைவிடு வாழ்வு வளமாகும், போதையில்லாத வாழ்வே எப்போதும் மகிழ்ச்சியை தரும் உட்பட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி பேரணியாக சென்றனர்.

இப்பேரணியில் சமுர்த்தி அதிகாரிகள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சங்கிலியனின் 405ஆவது சிரார்த்ததினம் அனுஷ்டிப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனான 2ஆம் சங்கிலியனின் 405வது சிரார்த்ததின அனுஷ்டிப்பும், நினைவுதினவிழாவும் நேற்றையதினம் வெள்ளிக்கிழமை யாழில் நடைபெற்றது.

இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையில் யாழ். நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னன் சிலையடியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# யாழ்– தீவகங்களுக்கு இடையிலான அம்புலன்ஸ் படகுச்சேவை நிறுத்தம்

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்ப்பாணம் தீவகங்களுக்கு இடையிலான அம்புலன்ஸ் படகுச் சேவை நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தீவகங்களுக்கு இடையிலான படகுச்சேவை கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் கியூமெடிக்கா தொண்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடி மற்றும் பராமரிப்புச் செலவுகள் காரணமாக அச்சேவையைக் கைவிடவுள்ளதாக மேற்படி தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளதாக நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் பேச்சுகளை மேற்கொள்ளுமாறும், மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் யாழ்.மாவட்ட பதில் மாவட்டச் செயலாளருக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தலைவர் உத்தரவிட்டார்.

தரைவழிப் போக்குவரத்து இல்லாத நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு உள்ளிட்ட தீவுகளில் வாழும் மக்களுக்கு இந்த அம்புலன்ஸ் படகுச் சேவையே பிரதான மருத்துவ மார்க்கமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு மாவட்டத்தில் 12,224 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீளடைவு அவசர உதவி செயற்றிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12,224 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீளடைவு அவசர உதவி செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலதிக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் சத்தியசீலன் கலந்து கொண்டு செயற்றிட்டம் தொடர்பான விளக்கங்களை உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் இணைந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வுதவித்திட்டம் வழங்கிவைக்கப்படவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு 3 வருடத்திற்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதுடன்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடத்தில் 12,224 குடும்பங்கள் வலுவூட்டப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் மண்முனை வடக்கு, மண்முனை தென் எருவில் பற்று, மண்முனை மேற்கு, ஏறாவூர் பற்று, கோறளைப்பற்று தெற்கு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட அஸ்வெசும பயனாளி குடும்பங்களில் 625 குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படவுள்ளன.

குடும்பம் ஒன்றிற்கு வருமானத்தை உறுதிப்படுத்தி கொள்வதற்காக வாழ்வாதார திட்டங்களை தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பங்களிப்புடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.100,000.00 பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம கணக்காளர் எம்.எஸ்.எம்.பசிர், ஆசிய வங்கியின் உயர் உத்தியோகத்தர்கள் என பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எஸ்.சுதாகரன் பொறுப்பேற்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எஸ்.சுதாகரன் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எஸ்.சுதாகரன் (30) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார். இலங்கை நிர்வாக சேவை தரம் 1 ஐ சேர்ந்த உத்தியோகத்தரான இவர் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் (காணி) மற்றும் கிழக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது திருகோணமலை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராகவும் பதில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் வலயக் கல்விப் பணிப்பாளர் வழிகாட்டலில் நடைபெற்றது. இதன்போது உத்தியோகத்தர்களினால் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது.

(படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

## சாளம்பைக்கேணி ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு மிம்பர் மேடை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

அம்பாறை, 3ஆம் வட்டாரம் சாளம்பைக்கேணி அல் மஸ்ஜித் ஹுதா ஜும்மா பள்ளிவாசலுக்கு மிக நீண்ட நாள் தேவையாக இருந்த மிம்பர் மேடை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட் சமூக அமைப்பின் நாவிதன்வெளி பிரதேசத்துக்கான பொறுப்பாளர் சம்சுல் ஆரீபினின் வேண்டுகோளுக்கு இணங்க றிஸ்லி முஸ்தபாவினால் இந்நிதி வழங்கப்பட்டது.

இதன் போது பள்ளிவாசல் நிர்வாகத்தினர் ஊர் மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.



சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் ஏற்பாட்டில் மாவட்டங்களுக்கிடையிலான இன நல்லுறவை கட்டியெழுப்பும் விசேட வேலைத்திட்டம் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் நடைபெற்ற இவ்வேலைத் திட்டத்தின் கீழ் சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தில் அங்கத்துவம் பெறும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் குடும்ப அங்கத்தவர்கள் என பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

(படம் அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

## ஸ்ரீ கோரக்கர் பிள்ளையாருக்கு லண்டனிலிருந்து ஒலிபெருக்கி சாதனங்கள்

(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார், ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலயங்களுக்கான ஒலிபெருக்கி மற்றும் துணைசாதனங்களுக்கான உதவி லண்டனில் இருந்து கிடைக்கப்பெற்றது.

ஆலய பொருளாளர் கிருஷ்ண பிள்ளை சசிகரன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சாதனங்களை லண்டனில் வசிக்கும் 'பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளை' அமைப்பின் ஸ்தாபகர் பத்மநாதன் நடேசன் வழங்கி வைத்தார்.

அவர் அமரத்துவமடைந்த தனது தாயாராகிய பத்மநாதன் மகேஸ்வரியின் 12ஆம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு இவற்றை வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வு சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம்(29) புதன்கிழமை மாலை நடைபெற்றது.

ஒலிபெருக்கி மற்றும் துணை சாதனங்களை நடேசன் சார்பில் ரவிந்திரன் கபிலாசன் உதயகுமார் ஸயிப்பிரசாந் ஆகியோர், சைவசமய ஆர்வலர் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் வி. ரி.சகாதேவராஜா முன்னிலையில் வழங்கி வைத்தனர். ஆலயம் சார்பில் பிரதம குரு சிவ ஸ்ரீ சுவேந்திரன் குருக்கள் மற்றும் செயலாளர் த.அழகுதுரை பொருளாளர் கி.சசிகரன் ஆகியோர் அதனைக் கையேற்றனர். ஆலய பொருளாளர் கிருஷ்ண பிள்ளை சசிகரன் கூறுகையில்.

லண்டனில் வாழும் பரோபகாரி பத்மநாதன் நடேசன் எமது கிராமத்தின் கல்வி பொருளாதார சமூக ஆன்மீக துறைகளின் வளர்ச்சிக்கு பல இலட்சம் ரூபா வழங்கி வருகிறார். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் என்றார்.

## பாதுகாப்பான புலம்பெயர்வு விழிப்புணர்வு நிகழ்வு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வை புலம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு இணைந்து (30) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாதுகாப்பான புலம்பெயர்வு ஊடாக புலம் பெயர்தல் முறையான புலம்பெயர்வு மற்றும் சட்ட ரீதியான புலம் பெயர்வே சிறந்தது தொடர்பிலும் இதன்போது தெளிவூட்டப்பட்டன. குறித்த புலம் பெயர்வு மூலமாக தகாத உறவுகளை தவிர்த்தும் தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டது. "பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வினூடாக வளமான எதிர்காலம்" என்ற எண்ணக் கருவுக்கு அமைய இவ் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வளர்முக நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் சென்று தொழில்களை மேற்கொள்ள முயற்சிப்பதும் கடல் வழி மூலமாக சர்வதேச நாடுகளுக்கு சட்ட விரோதமான புலம்பெயர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதும் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.புலம் பெயர்வின் போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமாக சட்ட ரீதியாக பதிவு செய்து பாதுகாப்பாக இடம் பெயர்வதும் நல்ல விடயமாக இங்கு தெளிவூட்டப்பட்டது.எச் ஐ வி தொற்று நோய் மற்றும் நோய் பரவல் புலம் பெயர்வின் போது ஏற்படுகிறது இதனை தடுக்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் மாவட்ட பால்வினை நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் வி.ஸ்ரீகௌரிஸ்வரன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஜெகன் ஆகியோர்கள் வளவாளர்களாக இணைந்து இதனை தெளிவுபடுத்தினர்.

## அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் தொற்றுநோய் பரவும் அபாயம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள வடிகானில் துர்நாற்றம் வீசுவதால் அப் பிரதேசத்தில் தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதோடு சுற்றாடலுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

சிலர் சமையலறை மற்றும் குளியளறை கழிவு நீரை வீட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள வடிகான்களில் ஓட விடுகின்றனர். இதனால் குறித்த பிரதேசங்களில் துர்நாற்றம் வீசுவதோடு அப்பிரதேசத்தில் ஈக்கல் மொய்ப்பதால் நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

உணவகங்களின் உரிமையாளர்களும் தமது கழிவு நீரை முறையாக அகற்றாமல் பிரதான வடிகான்களில் ஓட விடுவதால் மக்கள் பல்வேறு அசௌகரியகங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீடு, உணவகங்களின் உரிமையாளர்கள் தமது கழிவு நீரை சொந்த இடத்திலேயே முறையாக அகற்ற வேண்டும் அவ்வாறில்லாமல் பொது இடத்தில் கழிவு நீரை அகற்றுவது பாரிய குற்றமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்விச் சேவையிலிருந்து ஓய்வு

( காரைதீவு குறூப் நிருபர் )



மட்டக்களப்பு வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகு. தயானந்தன் 39 வருட அரச சேவையில் இருந்து நேற்று முன்தினம் (30) வியாழக்கிழமை ஓய்வு பெற்றார்.

1985இல் புத்தளம் மாவட்டத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று கல்விப்பணியை ஆரம்பித்த இவர் 2001இல் இருந்து மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றினார். அதன் பின்னர் 2015 தொடக்கம் மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தில் முறைசாரா கல்வி பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளராக சிறந்த பணியை திருப்திகரமாக நிறைவு செய்து நேற்று பிரியாவிடை பெறுகின்றார்.

ஆசிரியர் பயிற்சியை மட்டக்களப்பிலும், தொழில்நுட்ப துறையில் இளமானி பட்டப் படிப்பை இந்தியாவிலும் நிறைவு செய்தவர். அமெரிக்கா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் சமூக அபிவிருத்திக்கான குறுங்கால தலைமைத்துவ பயிற்சி நெறியை பூர்த்தி செய்தமை குறிப்பிடத்தக்கது.நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக செயலாளராக நீண்ட காலம் வினைத்திறனுடன் செயற்பட்ட செழுமைமிக்க தொழில் சங்கவாதியாக கல்விப்புலத்தில் தடம்பதித்தவர். தொடர்ந்து கனிஷ்ட உறுப்பினர்களுக்கு தலைமைத்துவத்துக்கான சந்தர்ப்பங்களை வழங்கி இன்றும் அங்கத்தவராக இருக்கின்றார்.இயற்கையாகவே சமூக மேம்பாடுசார் சிந்தனை கொண்டவர்.

## பிறை எப்.எம் அறிவிப்பாளர் றம்ஸானா ஸமீல் விருது வழங்கி கௌரவிப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



ரிதம் முகநூல் தொலைக்காட்சியின் நான்கு வருட நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள பல் துறைக் கலைஞர்களை கௌரவித்த 'ரிதத்தின் மகுடம்' நிகழ்வு அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதான திறந்த வெளியரங்கில் இந்நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ஆர்.ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்றது.

கௌரவிப்பு நிகழ்வில், இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபன பிறை எப்.எம். அறிவிப்பாளர் றம்ஸானா ஸமீல், ஒளிபரப்பு துறையில் 17 வருடங்கள் பணியாற்றியமைக்காக "Young Model Talent2024" சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, இம்மாவட்டத்தில் உள்ள சுமார் 25 இற்கும் மேற்பட்ட இளம் கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் அவர்களும், விசேட அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா உட்பட வைத்தியர்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரிக்கு உபகரண தொகுதி வழங்கல்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் கற்பிக்கப்பட்டு வரும் மோட்டார் சைக்கிள் தொழில் நுட்பவியலாளர் கற்கை நெறிக்குத் தேவையான ரூ.3 இலட்சம் பெறுமதியான உபகரண தொகுதியை அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர், சமூக செயற்பாட்டாளர் எம்.எம்.றியாட்டினால் கல்லூரி அதிபர் எம்.எம். ஹஸனால் (30) வழங்கி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில், கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சீ. எம்.றகீப், நூலகரும், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தருமான எம்.றுமைஸ் மற்றும் கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரிக்கு நீண்ட கால தேவையாகவிருந்த உபகரண தொகுதியை வழங்கி இம்முன்மாதிரியான செயற்பாட்டை செய்த சமூக செயற்பாட்டாளர் எம்.எம்.றியாட்டுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிப்பதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

பாலமுனை தினகரன் நிருபர்

கல்முனை மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் ஏற்பாட்டில் ஐ. சீ. ரீ. ஆங்கில பாட நெறிகளுக்கான கருத்தரங்கு கல்லூரியில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், கல்லூரியின் ஸ்தாபகருமான கலாநிதி சிராஸ் மீராசாஹீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சுமார் நாநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட இவ்கருத்தரங்கு நிகழ்வில் சில மாணவர்களுக்கு பிரதம அதிதி முழுமையாக கற்கை நெறியை இலவசமாக கற்பதற்கான புலமை பரிசில்களும் வழங்கி வைத்தார்.

## 'போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம்' விழிப்பூட்டல் நிகழ்வுகள்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவினால் சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு விழிப்பூட்டல் நிகழ்வுகள் நேற்று(31) நடைபெற்றது.

அதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் ஆலையடி வேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கும் புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு கொடி விற்பனை அறிமுக நிகழ்லும் நேற்று இடம்பெற்றது.

சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ஒருங்கிணைப்பில் உதவி பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் தலைமையில் இடம்பெற்ற விழிப்பூட்டல் கருத்தரங்கில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.அகிலன் வளவாளராக கலந்து கொண்டார்.

இதன்போது சமுர்த்தி திட்ட முகாமையாளர் கமலபிரபா வங்கி முகாமையாளர் சுரேஸ்காந்த் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு கொடி அறிமுக நிகழ்வு இடம்பெற்றதுடன் கொடி விற்பனையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# உலக புவி தினம் 2024இல் நிலைத்தன்மைக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு கௌரவம்

மகத்தான சவால்களுக்கு மத்தியில் கழிவு நிர்வகிப்பு வெற்றிகரமாக முன்னேறி வரும் நேரத்தில் ஏப்ரல் 22ஆம் திகதி உலக புவி தினம் கொண்டாடப்பட்டது. CocaCola அறக்கட்டளையின் நிதி பலத்துடன் World Vision Lanka தலைமையிலான பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்பதைத் தாண்டி, முறையான கழிவு நிர்வாகத்தை நோக்கமாகக் கொண்ட ASPIRE திட்டம் அந்த வெற்றிக்கு உறுதுணையாக உள்ளது என்பது இரகசியமல்ல.




இங்கு நிலைபேறான சூழலுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட லசந்த தீபால், கயான் சமீர, சமிலா சுரங்கி பெரேரா மற்றும் மஞ்சுளா ராமலிங்கம் போன்ற சுற்றுச்சூழல் ஆதரவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

### லசந்த தீபால்

வெலிவேரிய பிரதேசத்தில் வசிக்கும் தந்தையும் கணவனுமான லசந்தவின் பயணம் உறுதியான மற்றும் பலமான பயணமாகும். தனது குடும்பத்திற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய சவாலை எதிர்கொண்ட அவர், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டிருந்தார்.

ASPIRE இன் பயிற்சித் திட்டங்களின் மூலம் பெற்ற அறிவு மற்றும் திறன்களை நன்கு பயன்படுத்தி நிதி வலிமையைப் பெறவும் பணியாற்றினார்.

### கயான் சமீர

இன்று, ஒரு தொழிலதிபராக, கயானின் பயணம் அவரது இடைவிடாத முயற்சிகளின் விளைவாகும், அவர் தனது குடும்பத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது மட்டுமல்லாமல், பலருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி அந்த குடும்பங்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் பங்களித்தார்.

தனது குடும்பத்தின் பாரத்தை சுமந்த கயான், தனது சிறிய அளவிலான பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு தொழிலை மேலும் விரிவுபடுத்துவதில் சிரமத்தை எதிர்கொண்ட நேரத்தில், ASPIRE மூலம் தனது நிதி மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களைத் திரட்டி வணிகத்தை மேம்படுத்த முடிந்தது.

### சமிலா சுரங்கி பெரேரா

தன் இடைவிடாத முயற்சியால் வாழ்க்கையை வென்ற துணிச்சல் மிக்க பெண்மணியாக சமிலாவை குறிப்பிடலாம். பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியில், தாயாகவும், மனைவியாகவும், குடும்பத்தை வழிநடத்த தகுந்த வழியைத் தேடிய சமிலா, ஒரு பெண்ணாக சமூகத்தின் பல்வேறு தடைகளை எதிர்கொண்டார். ஆனால் ASPIRE இன் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவின் மூலம், அவர் சிரமங்களை சமாளித்து வெற்றிகரமான பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

### மஞ்சுளா ராமலிங்கம்

பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் எதிர்கொண்டு தன்னுடைய சொந்த முயற்சியில் தொழிலதிபரான மஞ்சுளா, ASPIRE மூலம் மிகவும் வெற்றிகரமான தொழிலதிபராக மாறி, தனது வாழ்க்கையில் பல எதிர்பார்ப்புகளை நிறைவேற்றினார். இதன் மூலம் தனது மகளின் மருத்துவராகும் கனவை நனவாக்கும் முதல் படியான தன் மகளை பல்கலைகழகத்தில் சேர்த்தார்.

ASPIRE இன் வழிகாட்டுதலின் மூலம் தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள், சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு அவர்களின் பங்களிப்பு அளப்பரியது என்பதால், உலக புவி தினத்தில் அவர்களை அதிகம் பாராட்ட வேண்டும்.

World Vision Lanka இன் ASPIRE திட்டமானது, The CocaCola Foundation போன்ற இலாப நோக்கற்ற திட்டங்களால் இயக்கப்படுகின்றமை புவி தினத்தில் மிகவும் முக்கியமானதாகும்.

## தினகரன் வர்த்தக உலா

# நிலைபேண்தகவினை நோக்கி வளரும் SDB வங்கி

இலங்கை வங்கித் துறையின் இயங்கு தளத்தில், அதனது மூலோபாய தூரநோக்கினில் நிலைபேண் தன்மையை முன்னிறுத்தி முன்னோக்கிய சிந்தனை, பெறுமதிகளினால் செலுத்தப்படும் அறங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு வினையூக்கியாக SDB வங்கி தோற்றம்பெற்றுள்ளது.

சமீபத்திய வருடங்களாக, பரந்த வீச்சில் பயனுறு நிகழ்ச்சித்திட்டங்களினை நிகழ்த்தி ESG (சுற்றுச்சூழல், சமூகம், மற்றும் ஆட்சி) துவக்கங்களில் அதிசிறப்பான பயணத்தினை மேற்கொண்டுள்ளது. SME களிற்கு ஆதரவளித்தல் மற்றும் பெண்களை வலுவூட்டல் முதலாக நிதி மற்றும் எண்ணிய உள்ளடக்கல் வரையில் சமூக, பொருளாதார, மற்றும் சுற்றுச்சூழல் முன்னரங்குகளில் மேன்மைக்கான உன்னத புகழைப் பெற்றுள்ளது.

தேவஹந்திய கிழக்கு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட முற்றுமுழுதான சூழல் புனரமைப்பானது சுற்றுச்சூழல் நிலைபேண் தன்மையில் ஒரு தனித்துவமான அடைவாக காணப்படுகின்றது. 25 ஹெக்டேயரினை கொண்ட தரிசு நிலத்தினில், இத்துவக்கமானது அந்நிலத்தினை மறுசீரமைத்தது மாத்திரமின்றி மாமிசத்திற்கான மாற்றுஉணவுகள் மற்றும் மூலிகை நல்லுணவுகள் என்பவற்றின் பயிரிடலின் ஊடாக 90 இற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கு மாற்று வருவாய்க்கான மூலத்தையும் வழங்கியுள்ளது. SDB வங்கியின் 25 ஆண்டு விழா கொண்டாட்டத்தினில் அறிமுகப்படுத்தப்பட்ட, இப்புதுமையான முயற்சியானது வங்கியின் முழுதளாவிய இலக்கினை சாராம்சப்படுத்துவதாக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நிலைபேண்தன்மைகளுடன் தடையற பிணைந்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க சக்தி யுகத்தில், பசுமை எதிர்காலத்தினை நோக்கி இலங்கையை உந்துவதிலான துடிப்பானவொரு வகிபாகத்தினை SDB வங்கி வகிக்கின்றது. பல்வேறு சூரியசக்தி கருத்திட்டங்களிற்கு நிதிவழங்க வங்கியை இயலுமையாக்கிய சூரிய சக்தி துறைத் தலைவர்களுடனான மூலோபாய பங்குடைமையானது, தேசத்தின் புதுப்பிக்கத்தக்க சக்தி இலக்குகளை நோக்கி குறிப்பிடத்தக்கவகையில் முன்னேற வழிநடாத்துகின்றது.

# இலங்கையின் பொருளாதார மற்றும் சூழல் ரீதியான எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் பங்கு

சங்கைக்குரிய பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தலைமையிலான தேசிய சுற்றாடல் ஒன்றியம் மற்றும் இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் (SLSEA) தலைவர் ரஞ்சித் சேபால ஆகியோருக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பான கண்ணோட்டம்...



சங்கைக்குரிய பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தலைமையிலான தேசிய சுற்றாடல் ஒன்றியமானது, "புதுப்பிக்கத்தக்க வலு சகத்தி மூலம் இலங்கையில் நிலவும் வலுசக்தி நெருக்கடியை நிவர்த்தி செய்தலும்; இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாத்தலும்" எனும் தலைப்பில், இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபையின் தலைவர் ரஞ்சித் சேபாலவிற்கு அண்மையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தது.

அத்துடன் இலங்கையானது, நிலைபேறான பாதையில் வேகமாகப் பயணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர், ரஞ்சித் சேபாலவுடன் முக்கிய கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார். குறித்த அறிக்கையின் முதன்மையான கவனமும், குறித்த கலந்துரையாடலின் தலைப்பும், இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புகள் ஆகியன பற்றியதாக அமைந்திருந்தன. நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திறனை மேம்படுத்துவதற்கான நிலைபேறான நடைமுறைகளின் முக்கியத்துவத்தையும், அது தொடர்பான மூலோபாய நடவடிக்கைகளையும் ஆராய்ந்தமை தொடர்பில் இக்கலந்துரையாடலில் எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

பாஹியங்கல தேரர் இந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டின் செலவினங்களை ஆராயும்போது, நாம் பெறும் வெளிநாட்டு கையிருப்பில் கணிசமான பகுதியானது, மின்சக்தி உற்பத்திக்காகன நிலக்கரி மற்றும் பெற்றோலியத்தை கொள்வனவு செய்வதற்கே செலவிடப்படுகிறது. இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை பெறுவதற்கு வருடம் முழுவதும் வாய்ப்பு உள்ளது. அதை நாம் சூரிய சக்தியிலிருந்தும் காற்று வலு சக்தியிலிருந்தும் பெறுவதன் மூலமும் அதன் பயன்பாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும். மன்னார் பிராந்தியத்தில் திட்டமிடப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்கள் பற்றி பல்வேறு ஆதாரமற்ற கட்டுக்கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன. இது SLSEA உடனான எமது கலந்துரையாடலுக்கு வழி வகுத்தது. அது தொடர்பில் எமது கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நாம் ஒரு அறிக்கையை வழங்கியுள்ளோம்." என்றார்.

# 2024 வருட கூட்டாளர் மாநாட்டில் Ezviz உடன் கூட்டாண்மையைக் கொண்டாடும் IT Gallery

IT Gallery நிறுவனத்தினால் 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட அதன் வருடாந்த கூட்டாளர் மாநாடானது, அதன் நாட்காட்டியில் முக்கிய நிகழ்வாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இது தொழில்துறையில் தொடர்புகளை வலுப்படுத்துதல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் திருமதி Rita Liu மற்றும் பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் திருமதி Li Xin ஆகியோர் இந்த வருட நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்வின் 2024 பதிப்பானது, ஸ்மார்ட் இல்ல பாதுகாப்பு (smart home security) தொடர்பான வர்த்தக நாமமான Ezviz உடனான IT Gallery நிறுவனத்தின் தொடர்ச்சியான கூட்டுறவை மேலும் வலியுறுத்துகிறது. அதன் தற்போதைய முன்னணி விநியோகஸ்தரான IT Gallery நிறுவனம், முதன்முதலில் Ezviz வர்த்தக நாமத்தை 6 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. இலங்கையில் உள்ள குடும்பங்களுக்கு WiFi கெமராக்கள் முதல் ஸ்மார்ட் நுழைவு சாதனங்கள் வரை புத்தாக்கமான பாதுகாப்புத் தீர்வுகளை வழங்குவது தொடர்பில் நிறுவனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஒரு அங்கமாக இது அமைகின்றது.

2023 ஆம் ஆண்டு முதல் தங்களது சொந்த வணிகத்தையும் Ezviz வணிகத்தையும் முன்னெடுத்துச் சென்ற IT Gallery நிறுவனத்தின், முதல் மூன்று இடங்களில் உள்ள கூட்டாளர்களை கௌரவிப்பதே இந்த நிகழ்வின் முதன்மையான நோக்கமாகும். இந்த நிகழ்வானது, வலுப்படுத்தப்பட்ட மற்றும் மேலும் அதிக இணைப்பைக் கொண்ட வலையமைப்பை உறுதி செய்யும் வகையில், தங்களது கூட்டாளர்களிடையே ஆழமான ஒத்துழைப்பை முன்னெடுப்பதற்கான வழியை ஏற்படுத்துகின்றது. நிறுவனத்தின் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும், உள்ளூர் சந்தையில் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கும், இவ்வருட நிகழ்வில் நாடு முழுவதிலுமிருந்து 350 பங்காளர்கள் கலந்துகொண்டனர்.

# புதிய டிஜிட்டல் வலயங்களுடன் யூனியன் வங்கியின் 24/7 ஸ்மார்ட் வங்கியியல் தீர்வு விஸ்தரிப்பு



யூனியன் வங்கி 24/7 ஸ்மார்ட் வங்கியியல் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் தனது டிஜிட்டல் வலயங்களை 2024 ஏப்ரல் மாதம் தனது தலைமையகத்திலிருந்து ஆரம்பித்து, புறக்கோட்டை, ராஜகிரிய, கண்டி, கம்பஹா, நீர்கொழும்பு மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளிலும் விஸ்தரித்துள்ளது. இவற்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு பண வைப்புகள், பண மீளப் பெறுகைகள், அட்டையில்லாத வைப்புகள், யூனியன் வங்கி கணக்குகளினுள் நிதிப் பரிமாற்றங்கள், யூனியன் வங்கி கிரெடிட் கார்ட் கொடுப்பனவுகள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் போன்றவற்றை மேற்கொள்ள முடியும். புதிய டிஜிட்டல் வலயங்கள் இரத்மலானை, காலி மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களிலும் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

வங்கியின் டிஜிட்டல் மாற்றச் செயற்பாட்டு மூலோபாயத்தில் முக்கிய படியாக இந்த டிஜிட்டல் வலயங்கள் அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களின் சௌகரியத்தை மேம்படுத்தி மற்றும் டிஜிட்டல் பிரசன்னத்தை விரிவாக்கம் செய்வதாகவும் அமைந்துள்ளது. வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கான அர்ப்பணிப்பின் அங்கமாக, பிந்திய புத்தாக்கங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை வாடிக்கையாளர்கள் மத்தியில் கொண்டுவருவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை வங்கி மேற்கொண்ட வண்ணமுள்ளது.

# 2023 ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ள DFCC வங்கி; சிறந்த நிதியியல் பெறுபேறு

DFCC வங்கி, 2023 ஆம் ஆண்டுக்கான தனது ஆண்டறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளதுடன், பலத்த சவால்கள் மற்றும் ஆர்வமூட்டுகின்ற வாய்ப்புக்கள் மத்தியில் மகத்தான பெறுபேறுகளை அது காண்பித்துள்ளது. சவால்மிக்க மற்றும் வலுவான பொருளாதார சூழலில் எதிர்நீச்சல் போட்டு, சாதனைகள் படைத்த ஒரு நிதியியல் ஆண்டை DFCC வங்கி பதிவாக்கியுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் காபன் சமநிலை கொண்ட வங்கியாக மாறுகின்ற அதன் முயற்சிகளுடன், நிலைபேண்தகமை சார்ந்த பல்வேறு முன்னெடுப்புக்களின் துணையுடன் இந்த சாதனைகள் அனைத்தும் அதன் ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கின்றன.



வெளிப்படை அறிக்கையிடல் தொடர்பில் வங்கி கொண்டுள்ள தீவிரமான தராதரங்களுக்கு அமைவாக, ஒருங்கிணைந்த அறிக்கையிடல் வடிவத்தை DFCC வங்கியின் ஆண்டறிக்கை உள்வாங்கியுள்ளது. நிலைபேணத்தகு அபிவிருத்தி மீது வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பை இது ஆழமாக நிரூபிப்பதுடன், அதன் முழுமையான சூழலியல் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு அணுகுமுறையை வலியுறுத்துகின்றது. வெளிப்படையான செயல்பாடு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் வங்கியின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காண்பித்தவாறு, நிதியியல் இலக்குகளுக்கெதிரான அச்சுறுத்தல் தொடர்பான ஆபத்துக்கள், வாய்ப்புக்கள் மற்றும் விளைவுகளுக்கு இந்த அறிக்கை கவனமாக தீர்வு காண்கின்றது.

DFCC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா இது குறித்து கருத்து வெளியிடுகையில், "2023 ஆம் ஆண்டுக்கான எமது ஆண்டறிக்கையை வெளியிடுவதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன், அதனை எமது பங்குதாரர்கள் தற்போது இணையத்தின் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்.

2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் இது வரையான அதன் பயணம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், பங்குதாரர்கள், பொதுமக்கள் https://dfcc2023.annualreports.lk/index.html என்ற இணைப்பின் மூலமாக அதனை பார்க்க முடியும்.

கூட்டு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பு

# ஆய்வகத்தை நிறுவ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் SLIIT, Huawei கைச்சாத்து



உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனமான Huawei நிறுவனத்துடன் SLIIT Kandy UNI ஆனது கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் பல்லகலவில் உள்ள SLIIT Kandy UNI இல் ஒரு புத்தாக்க கண்டுபிடிப்பு ஆய்வகம் நிறுவப்படவுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் SLIIT தலைவர்/ வேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் ரத்நாயக்க மற்றும் Huawei Huawei Technologies Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) Zhang Jinze (Zeh) ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வில், SLIIT கல்விப் பிரிவு பேராசிரியர் ராகுல அத்தலகே, ஆராய்ச்சி மற்றும் சர்வதேசப் பிரிவு பேராசிரியர் சமந்த தெலிஜ்ஜகொட, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அயந்த கோம்ஸ், கணிப்பொறி பீட பீடாதிபதி பேராசிரியர் பிரதீப் அபேகுணவர்தன, SLIIT Kandy UNI கல்விப் பிரிவு பீடாதிபதி கலாநிதி மாதவ ஹேரத், சட்டம் மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான சிரேஷ்ட முகாமையாளர் திருமதி நதாஷா ரணதுங்க, சொனாலி சேனாநாயக்க உள்ளிட்ட SLIIT பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

Huawei தரப்பிலிருந்து, பபங்கேற்பாளர்களாக Huawei Sri Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி Zhang Jinze (Zeh), EBG பிரதித் தலைவர் Ni Xiaopeng (Liam), அரச, பாரிய பெருநிறுவன EBG பணிப்பாளர் இசுரு ஜயசேகர, EBG தீர்வுகள் பணிப்பாளர் குணவர்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சியபத பினான்ஸ் பிஎல்சி கடனீட்டுப் பத்திர வெளியீடு மிகையான பதிவுகளைப் பெற்றுள்ளது

சம்பத் வங்கியின் துணை நிறுவனமும், இலங்கையின் வங்கியல்லாத நிதித்துறையில் முன்னணியிலும்; உள்ள சியபத பினான்ஸ் பிஎல்சி, முதலீட்டாளர்களிடமிருந்து அமோக வரவேற்பைப் பெற்று, அனைத்து எதிர்பார்ப்புகளையும் பூர்த்திசெய்து, அதன் சமீபத்திய கடனீட்டு பத்திர வெளியீட்டின் மகத்தான வெற்றியை அறிவிக்கிறது.



சியபத பினான்ஸ் பிஎல்சியின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப பொது வழங்கல், கடனீட்டுப் பத்திர வெளியீடு 28ஆம் திகதி மே மாதம் 2024 அன்று பதிவுகளுக்காக அதிகாரபூர்வமாக திறக்கப்பட்டு, சந்தையில் இருந்த குறிப்பிடத்தக்க நேர்மறையான முதலீட்டாளர்களின் அதிகளவிலான வரவேற்பின் காரணமாக அன்றைய தினமே சியபத பினான்ஸ் பிஎல்சி நிர்வாகத்தால் மூடத்தீர்மானிக்கப்பட்டது.

ஆரம்ப தவணையாக ரூ. 2 பில்லியன் மற்றும் அடுத்தடுத்த தவணைகளாக ரூ. 1 பில்லியன், ஒவ்வொன்றும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மிகையாக பதிவு செய்யப்பட்டதன் மூலம், சியபத பினான்ஸ் பிஎல்சியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் மீதான நேர்மறையான முதலீட்டாளர் வரவேற்பு மற்றும் நம்பிக்கை பிரதிபலிக்கப்படுகிறது. நிறுவனம் அளவுக்கு அதிகமாக விண்ணப்பங்களை பெற்று அதன் தொகை ரூ. 4 பில்லியனுக்கும் மேலாக உயர்ந்துள்ளமையானது சியபத பினான்ஸ் பிஎல்சியின் சலுகைகளுக்கான வலுவான தேவையைக் குறிக்கிறது.

சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் (நிறைவேற்றுப் பணிப்பாளர்) ஆனந்த செனவிரத்ன இந்த மிகையான பதிவுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த அதீதமான கோரிக்கையானது, எமது பங்குதாரர்களுக்கு பெறுமதியை வழங்குவதற்கும் நிலையான வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் எங்களின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

சியபத பினான்ஸ் பிஎல்சி மீது முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வலியுறுத்தும் வகையில், எங்களது கடனீட்டுப் பத்திர வெளியீட்டிற்கு கிடைத்த உற்சாகமான பதிலால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்' என்று கூறினார்.



# பாரிஸ் ஒலிம்பிக் தகுதிக்காக இலங்கையின் ஐவர் சீன தைப்பே போட்டியில் பங்கேற்பு

சீன தைப்பேயில் இன்று மற்றும் நாளை நடைபெறும் சீன தைப்பே பகிரங்க மெய்வல்லுனர் போட்டியில் ஒலிம்பிக் தகுதி பெறும் எதிர்பார்ப்புடன் இலங்கையின் ஐந்து வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்

800 மீற்றர் ஓட்ட வீராங்கனைகளான கயந்திகா அபேரத்ன மற்றும் தருஷி கருணாரத்ன, 400 மீற்றர் ஓட்ட வீராங்கனையான நதீகா ராமநாயக்க ஆகியோர் இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் (30) புறப்பட்டுச் சென்றனர். இதேநேரம் சீனாவின் சொன்கிங் நகரில் முடிவுற்ற கிரோன் பிரீ மெய்வல்லுனர் போட்டியில் பங்கேற்ற 400 மீற்றர் ஓட்ட வீரர் அனுர தர்ஷன மற்றும் இலங்கை ஈட்டி எறிதல் வீராங்கனை நதீஷா தில்ஹானி லேகம்கே ஆகியோர் அங்கிருந்து நேரடியாக இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக தைப்பே நகருக்கு பயணிக்கவுள்ளனர்.



பாரிஸில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி அளவை அடையும் இலக்குடனேயே இவர்கள் இந்தத் தொடரில் பங்கேற்கின்றனர். இதில் தருஷியின் பங்கேற்பு அதிக அவதானத்தை பெற்றுள்ளது.

கடைசியாக அவர் இரண்டு சர்வதேச போட்டிகளில் பங்கேற்றபோதும் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமல் பேயிருந்ததே இதற்குக் காரணமாகும். சுகவீனம் காரணமாகவே அவர் அந்தப் போட்டிகளில் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது. அவர் கடைசியாக டுபாய் மற்றும் ஒசாகா நகரங்களில் நடைபெற்ற கிரோன் பிரீ போட்டிகளில் பங்கேற்றிருந்தார்.

இதில் டுபாயில் அவர் போட்டியில் பங்கேற்றிருந்த சந்தர்ப்பத்தில் பாதியிலேயே விலகிக்கொண்டார்.

கடந்த ஆண்டு ஆசிய சம்பியன்சிப் போட்டியில் தருஷி 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் புதிய சாதனையுடன் வெற்றியீட்டினார். இதன் போதும் அவர் 2 நிமிடம் 00.66 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்தது சிறந்த காலமாக இருந்தது.

எனினும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு பெண்களுக்கான 800 ஓட்டப்போட்டியை 1 நிமிடம் 59.30 விநாடிகளில் முடித்திருப்பது குறைந்தபட்ச தகைமை அளவுகோலாகும்.

இதனிடையே கடந்த புதனன்னு (29) வொன்கிங் நகரில் கடைசியாக போட்டியிட்ட இலங்கை ஈட்டி எறிதல் வீராங்கனை நதீஷா தில்ஹானி அதில் 54.38 மீற்றர் தூரம் வரை வீசி இருந்தார். இதில் பாரிஸ் ஒலிம்பிக் தகுதிக்காக குறைந்தபட்ச தூரம் 64.00 மீற்றராகும்.

தைப்பே போட்டிக்கு பங்கேற்கு ஏனைய இலங்கை வீர, வீராங்கனைகள் தமது போட்டிகளில் பாரிஸ் ஒலிம்பிக் தகுதிக்கு நெருங்கி வந்திருப்பவர்களாக உள்ளனர். அதில் அனுர தர்ஷன கடைசியாக சீனாவில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தை 48.45 விநாடிகளில் நிறைவு செய்திருந்தார். இதில் பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான குறைந்தபட்ச தகுதி மட்டம் 45.00 விநாடிகளாகும். எனினும் அனுர இதுவரை வெளியிட்ட சிறந்த காலம் 45.30 விநாடிகளாக உள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் தகுதியை பெறுவதற்கு உலகெங்கும் தடகள வீர, வீராங்கனைகளுக்கு எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை வாய்ப்பு உள்ளது. இலங்கையைச் சேர்ந்து எந்த ஒரு தடகள வீர, வீராங்கனையும் ஒலிம்பிக் தகுதி மட்டத்தை காண்பிக்கவில்லை.

இதன் காரணமாக அண்மித்துள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு மெய்வல்லுனர் போட்டிகள் பலதுக்கும் வீர, வீராங்கனைகள் பங்கேற்று வருகின்றனர்.

நதீஷா ராமநாயக்க பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் இதுவரை காண்பித்துள்ள சிறந்த காலம் 52.61 விநாடிகளாகும். என்றாலும் பாரிஸ் ஒலிம்பிக் தகுதிக்கான குறைந்தபட்ச காலமாக 50.95 விநாடிகள் உள்ளது. 37 வயது கயன்திகா அபேரத்ன இதுவரை பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் பெற்ற சிறந்த காலம் 2 நிமிடம் மற்றும் 01.20 விநாடிகளாகும்.

# அமெ. ஆயுதத்தால் ரஷ்யாவை தாக்க உக்ரைனுக்கு அனுமதி



அமெரிக்கா வழங்கும் ஆயுதங்களைக் கொண்டு கார்கிவ் பிராந்தியத்திற்கு அருகில் உள்ள ரஷ்ய இலக்குகள் மீது மாத்திரம் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரைனுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுமதி அளித்துள்ளார்.

பதில் தாக்குதல் நோக்கத்துடன் ரஷ்யா தாக்குதல் நடத்திய இடம் அல்லது தாக்குதலுக்கு தயாராகும் இலக்குகள் மீது அமெரிக்க ஆயுதங்களை கொண்டு தாக்குதல் நடத்துவதற்கே உக்ரைனுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய எல்லையை ஒட்டிய உக்ரைனிய கார்கிவ் பிராந்தியத்தில் எதிர்பாராத தாக்குதலை நடத்திய ரஷ்யா அங்கு முன்னேற்றம் கண்டு வருகிறது.

இந்நிலையில் ரஷ்ய நிலப்பகுதிக்குள் அமெரிக்க ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு உக்ரைனுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டிலேயே அமெரிக்கா தளர்வை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனின் மேற்குலக கூட்டாளிகள் தமது கொள்கையில் தளர்வை ஏற்படுத்தினால், தமது நாட்டின் அணுசக்தி வல்லமையை வலியுறுத்தி 'கடும் விளைவுகளை' சந்திக்க நேரிடும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கடந்த செவ்வாய்க்கிழமை எச்சரித்திருந்தார்.

ரஷ்யாவுக்குள் இராணுவ இலக்குகள் மீது தமது ஆயுதங்களை பயடுத்துவதற்கு அனுமதி அளிக்கும் சமிக்ஞையை பிரான்ஸ் மற்றும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது முழு அளவில் படை நடவடிக்கையை ஆரம்பித்த ரஷ்யாவை பின்வாங்கச் செய்வதற்கு உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்கும் மிகப்பெரிய நாடாக அமெரிக்கா உள்ளது.

## சர்வதேச செய்திகள்

# டொனால்ட் டிரம்ப் 34 குற்றச்சாட்டுகளில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பு

### ஜூன் 11 இல் தண்டனை அறிவிப்பு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீது சுமத்தப்பட்ட குற்றவியல் வழக்கில் அவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதி பதவியில் இருந்த ஒருவர் இவ்வாறு குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது இதுவே முதல்முறை.

2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது, தாம் பாலியல் உறவு வைத்துக்கொண்டதை மறைக்க 77 வயது டிரம்ப், ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்குப் பணம் தந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டது.

அதை மறைக்க, சில ஆவணங்கள் பொய்யானவை என்று காட்டவும் அவர் முயற்சி செய்தார்.

இது தொடர்பில் டிரம்ப் மீது 34 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இவ்வழக்கை விசாரித்த 12 உறுப்பினர்கள் கொண்ட நீதிபதிகள் குழு அனைத்துக் குற்றச்சாட்டுகளிலும் டிரம்ப் குற்றவாளி என ஒருமனதாகத் தீர்ப்பளித்தது.

ஜூலை 11ஆம் திகதி இவ்வழக்கில் தண்டனை விதிக்கப்படும் என்று கூறப்பட்டது. முன்னதாக, ஜூலை 15ஆம் திகதி குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக டிரம்ப் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

நவம்பர் 5ஆம் திகதி அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனை வென்று மீண்டும் வெள்ளை மாளிகையில் குடியேற டிரம்ப் முயல்வார் என்று கருதப்பட்டது.

இந்நிலையில் இந்தத் தீர்ப்பால் ஜனாதிபதி தேர்தல் களத்தில் முன்னெப்போதும் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதை அரசியல் கவனிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தாம் தவறேதும் செய்யவில்லை என்கிறார் டிரம்ப். அவர் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யக்கூடும்.

தீர்ப்பளிக்கப்பட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'இது அவமானம். ஊழல்வாதியான நீதிபதி ஈடுபட்ட இவ்வழக்கில் மோசடி நடைபெற்றுள்ளது' என்றார்.

அவருக்கு அதிகபட்சமாக நாலாண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். இதற்கு முன்னர் இத்தகைய குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தகால சிறைத்தண்டனையோ அபராதமோ நன்னடத்தைக் கண்காணிப்போ விதிக்கப்பட்டதுண்டு.

சிறைக்குச் சென்றாலும் அவர் பிரசாரம் மேற்கொள்ளத் தடையேதுமில்லை. தேர்தலில் வெற்றிபெற்றால் அவர் ஜனாதிபதியாகவும் பதவியேற்கவும் முடியும்.

# காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தொடர்கிறது ரபாவில் உக்கிரம்: ஜபலியாவிலிருந்து வாபஸ்



காசாவெங்கும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்த நிலையில் தெற்கு நகரான ரபா மீது சரமாரி வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

சர்வதேச எதிர்ப்பு மற்றும் சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை மீறி பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமான ரபா மீது கடந்த மே மாத ஆரம்பத்தில் படை நடவடிக்கையை ஆரம்பித்த இஸ்ரேல் தற்போது அந்த நகரின் மேற்குப் பக்கமாக முன்னேறி வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நகரின் மேற்குப் பக்கமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான கூடார முகாம்கள் வரை இஸ்ரேலிய டாங்கிகள் வந்துகொண்டிருப்பதாகவும் அங்கு பீரங்கிகளுடன் கவச வாகனங்களை கண்டதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர். இந்தப் பகுதி இடம்பெயர்ந்தவர்களுக்கான வலயமாக உள்ளது.

முன்னதாக ரபாவின் எகிப்துடனான எல்லையை ஒட்டிய பிலடெல்பியா இடைவழி நிலத்தை கைப்பற்றிய இஸ்ரேல் இராணுவம், நகரின் கிழக்கு பகுதியில் உள்ள வீடுகளை திட்டமிட்டு தகர்த்து வருவதாக குறிப்பிடப்படுகிறது. ரபாவின் ஒட்டுமொத்த கிழக்கு பகுதியிலும் குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் பொது வசதிகள் முற்றாக அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுபுறம் கடந்த மூன்று வாரங்களாக உக்கிர மோதல் நீடித்த வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் இருந்து இஸ்ரேல் இராணுவம் வாபஸ் பெற்றுள்ளது. படை நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு புதிய நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகி இருப்பதாக இஸ்ரேல் இராணுவ கூறியுள்ளது.



இந்தப் படை நடவடிக்கையின் போது நூற்றுக்கணக்கான போராளிகள் கொல்லப்பட்டு, இஸ்ரேலிய பணயக்கைதிகளின் ஏழு சடலங்கள் மீட்கப்பட்டு 10 கிலோமீற்றர் நிலத்தடி சுரங்கங்கள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலில் ஜபலியா முகாமின் வீடுகள் மற்றும் பொது கட்டமைக்குள் தரைமட்டமாக்கப்பட்டு கணிசமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'ஒட்டுமொத்த இடமும் காணாமல்போயுள்ளது' என்று குடியிருப்பாளர் ஒருவர் அந்த முகாமிக்கு திரும்பிய நிலையில் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். 'மக்களால் அவர்களின் வீட்டை கண்டுபிடிக்க முடியவில்லை. எமது உறவினர்களை எம்மால் கண்டுபிடிக்க முடியுமா என்பது பற்றியும் எமக்குத் தெரியவில்லை. இது ஒரு குற்றச்செயலாகும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் 20 நாட்கள் நீடித்த தாக்குதலில் 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் உட்பட நகரில் பெரும்பகுதி அழிக்கப்பட்டிருப்பதாக காசா சிவில் பாதுகாப்பு அமைப்பின் பேச்சாளர் மஹ்மூத் பசல் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெற்ற பின் அங்கு திரும்பிய குடிமக்கள் முழு நகரும் அழிந்திருப்பதையே கண்டுள்ளனர்.

ஜபலியாவில் இருந்து இஸ்ரேலியப் படை வாபஸ் பெற்றபோதும் அங்கு பலஸ்தீன போராளிகள் தொடர்ந்து நிலைகொண்டு தாக்குதல்களை நடத்துவதாக போர் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'ஹமாஸ் மற்றும் ஏனைய பலஸ்தீனிய போராளிகள் இஸ்ரேலியப் படைகள் பின்வாங்குவதால், ஜபாலியாவில் மறுசீரமைப்பு செய்வதற்கான தங்கள் முயற்சிகளை நிச்சயமாக மீண்டும் ஆரம்பிப்பார்கள். ஜபாலியாவைச் சுற்றி இஸ்ரேலியப் படைகள் அழிக்கப்படாத எஞ்சிய ஹமாஸ் படைப் பிரிவுகள் உள்ளன' என்று காசா போர் களத்தை கண்காணித்து வரும் போர் கற்கைக்கான நிறுவனம் மற்றும் சி.பீ.டி. அமைப்புகள் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மத்திய காசாவின் புரைஜ் அகதி முகாமின் குடியிருப்பு பகுதிகள் மீது கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 11 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

ரபா நகரில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பகுதிக்கு அருகில் இந்த குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் கொல்லப்பட்டவர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் இருப்பதாகவும் காசா சிவில் பாதுகாப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக அல் புரைஜ் அகதி முகாமில் உள்ள அல் சவுஸ் குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் இரு குழந்தைகள் மற்றும் மூன்று பெண்கள் உட்பட குறைந்தது எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். தவிர அதே முகாமில் அல் ஹவுர் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இடம்பெற்ற மற்றொரு வான் தாக்குதலில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

ரபா தாக்குதலுக்கு முன்னர் அங்கு காசா மக்கள் தொகையில் பாதி அளவான 1.4 மில்லியன் மக்கள் அடைக்கலம் பெற்றிருந்த நிலையில் அது தொடக்கம் ஒரு மில்லியன் பேர் வெளியேறி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் காசா பஞ்ச நிலையை நெருங்கி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

இந்நிலையில் எகிப்துடனான ரபா எல்லைக் கடவையை இஸ்ரேல் கைப்பற்றியது தொடக்கம் காசாவுக்கு உதவிகள் செல்வது மேலும் சுருங்கியுள்ளது. ரபா எல்லைக் படவை மூடப்பட்டிருப்பதோடு ஏனைய எல்லைகள் வழியாகவும் காசாவுக்கு உதவிகள் வருவது குறைந்துள்ளது.

காசா கடற்கரையில் அமெரிக்கா கட்டிய தற்காலிய துறைமுகம் கடல் கொந்தளிப்பினால் உடைந்திருக்கும் சூழலில் அதன் வழியாகவும் உதவிகள் வருவது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த கடல் வழியாக சைப்ரசில் இருந்து உதவிக் கப்பல்கள் அனுப்பப்பட்டு வந்தன.

இதேநேரம் ஏற்கனவே போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்திருக்கும் நிலையில் எமது மக்கள் மீதான ஆக்கிரமிப்பு, கொலை, முற்றுகை, பட்டினி மற்றும் இனப்படுகொலைக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லப்போதில்லை என்று ஹமாஸ் அமைப்பு கடந்த வியாழனன்று கூறியிருந்தது.

இஸ்ரேல் போரை நிறுத்தினால் முழுமையான உடன்படிக்கை ஒன்றுக்குத் தயார் என்று அந்த அமைப்பு மத்தியஸ்தர்களிடம் தெரிவித்தள்ளது.

ஹமாஸை ஒழிப்பது மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் வரை போரை தொடர்வதாக இஸ்ரேல் கூறி வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 1ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.